கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

# PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No.QD/202/News/2018. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 142 | இதழ் : 23 | திகதி : 25.12.2018 | விலை : 45.00

## தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நீதியுடனான தீர்வு நிலைநாட்டப்பட வேண்டும்

-நத்தார் செய்தியில் யாழ். ஆயர்



உலகில் வாழும் மனிதர்கள் அனைவராலும் இனம், மொழி, மதம், நாடு என்ற வரையறைகளை கடந்து கொண்டாடப்படும் பெருவிழாவாக கிறிஸ்து இயேசுவின் பிறப்பு விழாவான கிறிஸ்மஸ் அமைகின்றது. கிறிஸ்து பிறப்பை பெரு மகிழ்வின் விழாவாக நாம் அனைவரும் கொண்டாடி மகிழும் வேளையில் அம்மகிழ்வை வெளிப்படுத்த நாம் மேற்கொள்ளும் ஆயத்தங்களும், அலங்காரங்களும், குதூகலிப்பு களியாட்டங்களும் கிறிஸ்து பிறப்பு விழாவாக அமைய முடியாது. மக்கள் எதிர்பார்த்து இருந்த மெசியா ஏழ்மையின் வடிவில் அவதரித்து, தன்னைத் தாழ்த்தி, "பணி பெற அன்று பணி புரியவே வந்தேன்" என்பதை எண்பித்தார். இத்தகைய ஏழ்மை நிலையும், பணி வாழ்வும் கிறிஸ்தவர்களாகிய எமக்கு இருக்க வேண்டிய கிறிஸ்து இயேசுவைச் சார்ந்த பண்புகளாகும். கிறிஸ்தவ வாழ்வின் மற்றும் கிறிஸ்மஸ் விழாவின் முழுமை இத்தகைய பண்புகளில் நாம் நிலைகொள்வதில் தான் தங்கியுள்ளது.

அதிரடியான அரசியல் மாற்றங்களால் இன்று நம் தேசம் நிலைகுலைந்துள்ளது. சூழ்ச்சிகளுக்கும், பிற்போக்குத்தனங்களுக்கும் துணைபோகாது இதய சுத்தியுடன் ஆள்வோர் மற்றும் ஆளப்படுவோர் நடந்து கொள்வதன் மூலமே தேசம் அமைதி பெற்று சமாதானப் பாதையில் அபிவிருத்தி அடையும். தமிழ் மக்களாகிய எமது அத்தியாவசிய பிரச்சினைகளுக்கு நீதியுடன் கூடிய தீர்வு நிலை நாட்டப்பட அனைத்து தரப்பினரும் எமக்கிடையேயுள்ள கட்சி பேதங்களையும், கொள்கை வேறுபாடுகளையும் களைந்து ஒற்றுமையுடன் மனம் திறந்து செயற்பட வேண்டும். வேதனைகள், துன்ப துயரங்கள், சமூகத்தில் நிகழும் வேண்டாத சமூகச் சீரழிவுகள் களையப்பட்டு எங்கும் பசுமை படர வேண்டும்.

"நாம் வாழ்வு பெறும் பொருட்டு கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார்" (1யோவான். 4:9) "இம்மானுவேல் என்றால் கடவுள் நம்முடன் இருக்கின்றார் என்பது பொருள்" (மத். 1:23) "அவர்களின் துன்பங்களை நான் அறிவேன், பாலும் தேனும் பொழியும் நல்ல பரந்ததோர் நாட்டிற்கு அவர்களை நடத்திச் செல்லவும் இறங்கி வந்துள்ளேன்" (வி.ப. 3:7-8) என்ற ஆண்டவரின் அருள்வாக்குகளில் முழுமையான நம்பிக்கை கொண்டு கிறிஸ்து பிறப்பு எமக்கு அருட்செல்வங்களைப் பொழிந்திட குழந்தை இயேசுவிடம் அன்னை மரியா வழி வேண்டுதல் செய்வோம்.

புதியதொரு ஆண்டை எதிர்கொள்கின்றோம். கடந்து சென்ற ஆண்டிற்கு கையசைக்கும் இவ்வேளையில் கடந்த ஆண்டில் இறைவன் எமக்கு செய்த நன்மைத் தனங்களை நன்றியுடன் நினைவு கூர்ந்து பிறக்கும் புது வருடத்தில் இறைவனின் சித்தத்திற்கு அமைவாக எமது செயற்பாடுகளை திட்டமிட்டு வெற்றி பெறுவதற்கான இறையாசியை வேண்டி நிற்போம். எமது வாழ்வின் முன்னேற்றத்திற்கும், பிறரின் வாழ்வின் முன்னேற்றத்திற்கும் உழைக்கும் அழைப்பின் ஆண்டாக புதிய ஆண்டை எதிர்கொண்டு இறைவனின் குரலுக்கு செவிமடுத்து செயற்படும் ஆண்டாக புத்தாண்டை வரவேற்போம். அனைவருக்கும் இறையாசீர் வேண்டி எனது கிறிஸ்மஸ் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்கின்றேன்.



## திருத்தந்தையின் நத்தார் செய்தி

கலிலேயாவில் யாரும் அறியாத ஒரு சிறு கிராமத்தில், உலகிற்கு அறிமுகமாகாத ஓர் இளம்பெண்ணின் உள்ளத்தில், உலகை ஒளி மயமாக்கும் மகிழ்வை இறைவன் ஏற்றி வைத்தார் என திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தனது நத்தார் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இறை மகனை மகிழ்வுடன் வரவேற்க இளம் பெண் மரியா பெற்ற அதே அழைப்பு இன்று திரு அவை முழுமைக்கும் வழங்கப்படுகிறது. இறைவனை நம் உள்ளத்தில் வரவேற்றால் எந்தக் கவலையும், அச்சமும் நம் உள்ளத்து அமைதியைக் குலைத்துவிடாது.

"மகிழ்வு, செபம் மற்றும் நன்றியுணர்வு" என்பன கிறிஸ்து பிறப்பு விழாவை அனுபவிக்க நம்மையே தயாரிக்கும் மூன்று விடயங்கள் எனவும் திருத்தந்தை தனது நத்தார் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.

## 'தர்மபிரபாஸ்வர' விருது



தேசிய கத்தோலிக்க ஊடக மையமும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சும் இணைந்து கிறிஸ்தவ கலை இலக்கிய வளர்ச்சிக்கு பணியாற்றும் கிறிஸ்தவ கலைஞர்களுக்கு இவ்வருடம் முதல் வழங்கும் 'தர்ம பிரபாஸ்வர' தேசிய விருதினை யாழ். மறை மாவட்ட கலைஞர்களான 28 வருடங்கள் நாடகத்துறையில் பணியாற்றும் திரு.யோண்சன் ராஜ்குமார் அவர்களும், 33 வருடங்கள் இசைத்துறையில் பணியாற்றும் திரு. அ. றொ. விஜயகுமார் அவர்களும் அண்மையில் பெற்றுக் கொண்டனர்

## சர்வதேச மாணவர் முழக்கத்தில் புங்குடுதீவு பங்கு மாணவி சாதனை



யா/புங்குடுதீவு மகா வித்தியாலய தரம் 7 மாணவி செல்வி கனிஸ்ரா சிவகுமார் சிங்கப்பூரில் நடைபெற்ற 2018ம் ஆண்டிற்கான சர்வதேச மாணவர் முழக்கத்தில் போட்டியிட்டு சாதனை படைத்து தாய் நாட்டிற்கும், தமிழ் சமூகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார். இம்மாணவியை யாழ் சென். ஜோண்ஸ் கல்லூரி ஆசிரியர் திரு. பரமானந்தம் எட்வேட் கஜன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் திரு.ச.பாலசண்முகன் ஆகியோர் பயிற்றுவித்ததுடன், புங்குடுதீவு புனித சவேரியார் கல்வி அபிவிருத்திக் குழு, புங்குடுதீவு உலக மையம், புங்குடுதீவு சைவ இளையோர் சங்கம் என்பனவும் அதிபர் ஆசிரியர்களும் மாணவியின் சாதனைக்குக் கரம் கொடுத்துள்ளனர். மேற்படி போட்டியில் 8 நாடுகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.




அன்று வார்த்தை மனுவுருவானபோது
வானில் வால்வெள்ளியும் எழுந்தது
ஏரோதன் வாளும் எழுந்தது
அழைத்தல் ஆண்டில்
நன்மைகள் வென்றிட
தீமைகள் தோற்றிட
இறைவன் குரலுக்கு
செவிமடுத்து
செயற்படின்
அருள்நிறை
வாழ்வின்
விண்
மீன்
நீ




## குருமுதல்வரின் நத்தார் செய்தி



கிறிஸ்மஸ் நிகழ்வின் போது இயேசுவின் முதல் வருகையையும், உலக முடிவில் அவரது இரண்டாம் வருகையையும் பற்றி சிந்திக்கும் நாம் அவரது மூன்றாம் வருகையை அலட்சியம் செய்யக் கூடாது. கிறிஸ்துவின் மூன்றாம் வருகை என்பது அவரது முதல் வருகைக்கும் இரண்டாம் வருகைக்கும் இடைப்பட்ட காலமாகிய இன்று நடைபெறும் வருகையாகும். அருட்சாதனங்கள் ஊடாக, இறைவார்த்தையூடாக, நம் அயலவரூடாக, ஏழைகள், அனாதைகள், கைவிடப்பட்டோர், உதவியற்றோர் ஊடாக கிறிஸ்து தினமும் எம்மை சந்திக்க வருகிறார். இன்று எம்மை சந்திக்க வரும் கிறிஸ்துவை நாம் தவறவிடுவோமென்றால் அவரது முதல் வருகையும் இரண்டாம் வருகையும் அர்த்தமற்றதாகிவிடும்.

அனைவரிலும் கிறிஸ்துவைக் கண்டு உண்மையான மகிழ்ச்சியோடு கிறிஸ்மஸ், புதுவருடத்தைக் கொண்டாட எம் இறை ஆசீர் நிறைந்த வாழ்த்துக்கள்

- அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் -

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## எமது எண்ணம்

### அழைத்தல் ஆண்டும் மாற்றத்துக்கான புரிதலும்

கிறிஸ்து பிறப்பு விழாவோடு புத்தாண்டும் மலர்கின்றது. 2019 ஆம் ஆண்டை யாழ் கத்தோலிக்கத் திருச்சபை அழைத்தல் ஆண்டு என பிரகடனப்படுத்தியுள்ளது. யாழ் ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் ஆசீர்வாதத்தோடு 2019 ஆம் ஆண்டு அழைத்தல் வருடமாக மலர்கின்றது. அழைத்தல் என்பது பல்வேறு பொருள் விளக்கங்களைக் கொண்டது.

கத்தோலிக்க திருச்சபையில் இறை அழைத்தல் என்று சொல்லும்போது அது பணிக்குருத்துவ அழைத்தலையும் பொதுக் குருத்துவ அழைத்தலையும் கொண்டதாகவே உள்ளது. திரு முழுக்குப் பெற்ற ஒவ்வொரு விசுவாசியும் இத்தகைய பொதுக் குருத்துவத்தில் அங்கம் வகிக்கின்றான். அதில் சிறப்பு அழைப்பு பெறும் ஒரு சிலர் பணிக்குருத்துவத்தின் அழைப்பை ஏற்று குருக்களாக பணியாற்றுகின்றனர்.

அழைத்தல் ஆண்டு என்பது யாழ் திருஅவை முன் வைக்கும் இவ்வாண்டின் நோக்கமானது பொதுநிலை விசுவாசிக ளின் பொதுக் குருத்துவ அழைப்பில் அவர்களது பொறுப்புகள், கடமைகள், உரிமைகளை அவர்கள் உணர்ந்து ஏற்று இறைவ னின் குரலுக்குச் செவிமடு செயற்படு என்னும் கருப்பொருளை ஏற்று வாழத் தூண்டுவதே ஆகும். இன்று பொதுக்குருத்துவத்தில் பணிக்குருத்துவத்தின் இறை அழைத்தலை உணர்ந்து திருச் சபையில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை மிகக் குறைந்து செல்கின்றது.

பலர் இன்று வாழ்க்கைச் சுமை போரின் பாதிப்புக்கள், தற்போதைய சுகபோக வாழ்க்கை காரணமாக இவ் அழைப்பை ஏற்க தயங்குகின்றனர், மறுக்கின்றனர். ஆகவே இவ் அழைத்தல் ஆண்டில் அன்பியங்கள், பங்குத் திருச்சபைகள், மறைக்கோட்டங் கள் வழியாக முழு யாழ் மறைமாவட்ட இறைமக்களும் தமது தனிப்பட்ட பொதுக்குருத்துவ அழைப்புக்கள், கடமைகள், உரிமைகளை உணர்ந்து திருச்சபையின் வளர்ச்சிக்கு சேர்ந்து உழைக்கும் மனப்போக்கையும் வகிபாகத்தையும் உற்றுநோக்க வேண்டும். அதற்கான பல நிகழ்ச்சித் திட்டங்களை மறை மாவட்டம் அனைத்து ஆணைக்குழுக்களூடாக ஒழுங்கு செய்கின்றது.

அதேவேளை, சமூகச் சீர்திருத்தம், சமூக உரிமை, முப்பது ஆண்டுகாலப் போரின் பக்கவிளைவுகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் ஆகியவற்றைச் செய்வதற்கான தற் துணிவுக்குரிய வழியாகவும் இந்த அழைத்தல் ஆண்டைப் பயன்படுத்த வேண்டும். பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனுக்கும் இயற்கையிலேயே உரிமை உண்டு. அவன் யாருக்கும் கட்டுப் பட்டவனாக வாழ வேண்டிய அவசியம் கிடையாது. ஆனால் கட்டுக்கோப்பையும், ஒழுக்கத்தையும் மனித விழுமியங்களையும் பேணத் தெரிந்தவனாக மனிதன் வாழ வேண்டும். மற்றவனு டைய உரிமையைத் தட்டிப் பறித்தல் அல்லது அடக்கி ஆழ முற்படுதல் என்பது இயற்கை உரிமைக்கு மாறானது.

விவிலியம் இந்த உரிமையை அன்பின்பால் நோக்கு கின்றது. அன்பு செலுத்துதல் என்பது உதவி தேவைப்படும் நேரத் தில் அல்லது நிலை அறிந்து கைகொடுத்தல் என்ற புரிதலை முன் வைக்கின்றது. மனிதனை அன்புதான் கட்டுப்படுத்தும். அன்பு தான் அடிமைப்படுத்தும். ஆனால் இந்த அன்பின் மூலம் ஏற்படும் கட்டுப்படுதல், அடிமை ஆகிய இந்த இரு விடயங்களையும் சர்வாதி காரத்தினால் ஏற்பட்டது என ஒருபோதும் வரையறை செய்ய முடி யாது. சர்வாதிகாரம் என்பது வேறு. அதாவது நான் மட்டும் அல்லது எனது இனம் மட்டும் என்று நினைத்து மற்றைய உறவுகளை அல்லது மற்றைய இனத்தவர்களை கட்டுப்படுத்தி அடிமைப் படுத்துவதாகும்.

நான் மட்டும் அல்லது எனது இனம் மட்டும் என்று நினைத்துக் கட்டுப்படுத்துகின்ற போக்கு குடும்பத்தில், சமூகத் தில் மாத்திரமல்ல இன்று உலக அரசியல் ஒழுங்கிலும் மேலோங்கி வருகின்றது. இதனால்தான் விடுதலை வேண்டி நிற்கின்ற ஏனைய தேசிய இனங்கள் அடிமைப்படுத்தலுக்கு உள்ளாகின்றன. ஆகவே தான், இலங்கை உட்பட உலகில் இன்று மேலோங்கி வரும் சர்வாதிகரத்தின் மூலமான அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை யாவதற்கான யுக்தியாகவும் இந்த அழைத்தல் ஆண்டைப் பயன்படுத்தலாம்.

அஹிம்சை, ஜனநாயகம், நேர்மையான அன்பு, கருணை, விட்டுக் கொடுத்தல் சகிப்புத்தன்மை, சமத்துவம், சமநிலை, தன்னை முன்னிலைப்படுத்தாத தலைமைக்குரிய பண்பு போன்றவை, இந்த அழைத்தல் என்பதில் தாராளமாக உண்டு.

அத்துடன் தன்னிச்சையான முடிவுகளை எடுத்து அரசைக் குழப்புகின்ற ஆட்சியாளர்களுக்கு முரண்பாட்டில் ஓர் உடன்பாடாக இணைந்து பணியாற்றுதல் என்ற அரசியலையும் இந்த அழைத்தல் சொல்லிக் கொடுக்கின்றது. ஆகவே மாற்றத்துக் கான இந்தப் புரிதலோடு உங்களுக்கு நத்தார் புதுவருட நல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்

## யாழ் மாகாண அமலமரித் தியாகிகள் சபைக்கு நான்கு புதிய திருத்தொண்டர்கள்



யாழ் மாகாண அமலமரித் தியாகிகள் சபைக்கு புதிய திருத்தொண்டர்களாக அருட்சகோதரர்க ளான அமிர்தநாதர் சியாஸ்ரன் ஜெனிஸ், சகாய தாசன் ஜேம்ஸ் சுரேந்திரராஜா, வேதநாயகம் அனுசியஸ், சந்தியோகு வின்சன் மைக்கல் ஆகி யோர் 09.12.2018 மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு பொன்னையா ஜோசப் ஆண் டகையால் கொழும்புத்துறை புனித டி மசனெட் ஆலயத்தில் திருநிலைப்படுத்தப்பட்டனர்.

## அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு

இளையோர் ஆண்டினை முன்னிட்டு மேற்கொள்ளப்படும் அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு 2019ம் ஆண்டு தை மாதம் 12ம் திகதி சில் லாலை புனித யோசவ் வாஸ் திருத்தல திருநாள் திருப்பலி நிறைவில் நடைபெறவுள்ளது.

இயக்குநர்
இளையோர் ஆணைக்குழு,
யாழ். மறைமாவட்டம்.

## புங்குடுதீவு சறத்ஜீவன் தரிசனம் மழலைகள் முன்பள்ளி ஒளிவிழா

புங்குடுதீவு சறத்ஜீவன் தரிசனம் மழலை கள் முன்பள்ளியின் 2018ம் ஆண்டிற்கான ஒளி விழா நிகழ்வும், மழலைகள் கௌரவிப்பு நிகழ் வும் 05-12-2018 புதன்கிழமை அன்று முன் பள்ளியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விலே பிரதம விருந்தினராக புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலய பங்குத்தந்தை அருட்பணி செ.செபஜீவன் அடிக ளாரும், சிறப்பு விருந்தினர்களாக செல்வி நித்திலா மரியாம்பிள்ளளை அவர்களும், அருட்சகோதரி மரினா மரியாம்பிள்ளை அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## புன்னாலைக் கட்டுவன் புனித இராயப்பர் ஆலய பங்கில் மறையறிவுக் கண்காட்சி

உரும்பிராய் பங்கின் புன்னாலைக் கட்டுவன் புனித இராயப்பர் ஆலயத்தில் மறை யாசிரியர்கள் மற்றும் மறைக்கல்வி மாணவர்களி னால் கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு 02.12.2018 ஞாயிறு அன்று மறையறிவு சார்ந்த கண்காட்சி இடம்பெற்றது.

பங்குத்தந்தை அருட்பணி ம.பத்திநாதர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ் மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலைய இயக்குநர் அருட்பணி அ.பெ.பெனற் அடிகளாரும், அருட்பணி அமல்ராஜ் அ.ம.தி. அடிகளாரும் இணைந்து கண்காட்சியை ஆரம்பித்து வைத்த னர். சலேசியன் சபை அருட்சகோதரிகளும் இதில் கலந்து கொண்டனர்.

## மறையாசிரியர் வதிவிடப் பயிற்சி - 2019

யாழ் மறைமாவட்ட பங்குகளில் பணி யாற்றும் ஞாயிறு மறைப்பாடசாலை மறை ஆசிரி யர்களை உருவாக்கும் நோக்குடன் எதிர்வரும் 2019 ஜனவரி 20 ஆம் திகதி முதல் ஏப்ரல் 06 திகதி வரையிலான காலப்பகுதியில் வதிவிடப் பயிற்சி யாழ் மறைக்கல்வி நடுநிலையத்தில் நடாத்தப்படவுள்ளது. மேற்படி பயிற்சிக்கான விண்ணப்பங்கள் பங்குத்தந்தையர்கள் ஊடாக கோரப்பட்டுள்ளது.

## திருப்பாலத்துவ சபை தினம்

2019 ஆம் ஆண்டுக்கான திருப்பாலத் துவ சபை தினம் ஜனவரி மாதம் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படும்.

## துயர் பகிர்கின்றோம்



யாழ். மறைமாவட்டக் குரு வாகிய அமரர் அருட்பணி ஹில்லோரியன் வேதநாயகம் அ.ம.தி அடிகளார் நவம் பர் 29 அன்று இறைபதமடைந் தார். அன்னாரின் ஆன்மா இறை சந்நிதானத்தில் இளைப்பாற பாதுகாவலன் பிரார்த்தித்து நிற்கின்றது.

## புனித யோசவ் வாஸ் இறையியல் கல்லூரி புதிய அணிக்கான மாணவர் தெரிவு

கிறிஸ்தவ கற்கைகளில் இளமானிப் பட்டத்தை வழங்கும் மேற்படி கல்லூரியின் புதிய அணி - 2019 ஜனவரியில் ஆரம்பமாகவுள்ளது. ஆர்வலர்கள் ஜனவரி மாதத்தில் தமது பங்குத் தந்தையரை அணுகி தமக்கான விண்ணபப் படிவங்களை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவு திகதி ஜனவரி 15 - 2019 ஆகும்.



தும்பளை புனித மரியாள் ஆலயம் 29.11.2018 அன்று யாழ் மறைமாவட்ட குருமுதல் வர் ப.யோ.ஜெபரட்ணம் அடிகளாரால் ஆசிர்வ திக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இவ்வாலயம் 2014 ஆவணி அருட்பணி மவுலிஸ் அடிகளாரால் அடிக்கல் நாட்டப்பட்டு முதல் பகுதி 2015 கார்த் திகை திறந்து வைக்கப்பட்டது.



குருநகர் பங்கில் புனித யாகப்பர் ஆலய வளாகத்தில் புதிய பங்குப் பணிமனை அமைப்பதற் கான அடிக்கல் 08-12-2018 அன்று பங்குத்தந்தை அருட்பணி சாள்ஸ் ஜஸ்ரின் அடிகளார் தலைமை யில் யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் நாட்டப்பட்டது.

## உரும்பிராய் பங்கில் கருத்தமர்வு

உரும்பிராய் பங்கின் அனைத்து ஆல யத்தைச் சேர்ந்த வழிபாட்டு குழு, பாடகர் குழு மற்றும் மறையாசிரியர்களுக்கான திருவழிபாட்டு விடயமான கருத்தரங்கு 22.12.2019 ஆம் திகதி புனித மிக்கேல் ஆலயத்தில் இடம்பெற்றது. அருட் பணி ஜேம்ஸ் அடிகளார் இக்கருத்தரங்கை நெறிப்படுத்தினார்.

## புனித யோசவ் வாஸ் திருநாள் - 2019

இலங்கையின் திருத்தூதரான புனித யோசவ் வாஸ் திருநாள் யாழ் மறைமாவட்டத்தில் 12.01.2019 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

புனித யோசவ்வாஸ் திருநாள் ஜனவரி 16 ஆம் திகதி அமைந்தபோதிலும் பல்வேறு ஆலயங்களின் திருநாட்கள் அவ்வாரத்தில் அமை வதால் யாழ் மறைமாவட்டத்தில் 2019 ஆம் ஆண்டு புனித யோசவ் வாஸ் திருநாள் ஜனவரி 12 ஆம் திகதி கொண்டாடப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## இறை இரக்கத்தாலும் திரு ஆட்சிப் பீடத்தின் பணிப்பினாலும் யாழ் மறை மாவட்ட ஆயரான ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆகிய நாம் குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய இறைமக்களுக்கு விடுக்கும் திருவருகைக்கால சுற்றுமடல்

Circular No: 11/2018

மீண்டுமொரு திருவருகைக் காலத்தோடு ஒரு புதியதொரு திருவழிபாட்டு ஆண்டில் கால் பதிக்கிறோம். எங்கள் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவில் இறைவன் வெளிப்படுத்திய மீட்பின் மறை பொருளை ஒவ்வொரு திருவழிபாட்டு ஆண்டிலும் முழுமையாக வாழ்கின்றோம். நாம் ஆரம்பிக்கும் இத் திருவழிபாட்டு ஆண்டு வெற்றுச் சடங்குகளோடு கடந்து போகும் ஒரு வருடமாக அமையாமல் மீட்பின் செயல் முறையில் நாம் முழுமையாகப் பங்குபற்றி ஆன்மீக ரீதியாக பயன்பெறுகின்ற காலமாக அமைய வேண்டும். மீட்புத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வாகிய இயேசுகிறிஸ்துவின் பிறப்புக்கு தகுந்த விதத்தில் ஆயத்தம் செய்ய திருவருகைக் காலம் அழைப்பு விடுகின்றது. இறந்த காலத்தில் நிகழ்ந்த இயேசுவின் திருவருகையை நினைவு கூர்ந்து எதிர்காலத்தில் வரவிருக்கின்ற இரண்டாம் வருகையை எதிர்நோக்கி இறைவார்த்தை, அருளடையாளங்கள் வழியாகவும் ஏழை எளியவர் துன்புறுபவர் வடிவிலும் இன்று நிகழ்கின்ற சமகால வருகையில் அவரை அடையாளம் கண்டு வாழ திருவருகைக் காலம் அழைக்கிறது. "ஆண்டவராகிய இயேசுவே வாரும்!" என்கின்ற தொடக்க கிறிஸ்தவர்களின் வேண்டுதல் எமது நாவுகளிலும் இக்காலத்தில் ஓங்கி ஒலிப்பதாக.

நாட்டின் குழப்ப நிலை

அண்மை நாட்களாக நாட்டில் எழுந்துள்ள அரசியல் சிக்கல் அனை வரினதும் கவலையையும், கரிசனையையும் ஈர்த்துள்ளது. அதிகாரம் இருந் தால் சட்டத்தை கையிலெடுத்துக் கொள்ளலாம் என்ற போக்கின் தொடர் வளர்ச்சி நிலையானது நாட்டின் அதியுயர் சட்டமாகிய அரசியல் யாப்பையே கையிலெடுத்துக் கொள்ளும் மனப்பாங்கையும், பாராளுமன்றை கேலிக்குள்ளாக்கி, நாட்டின்நிர்வாகத்தையேஸ்தம்பிக்கச்செய்து ஜனநாயக விழுமியங்களை கேள்விக்குள்ளாக்கும் நிலையையும் ஏற்படுத்தியுள்ளது. தீமையிலிருந்து நன்மையை வரவைக்க வல்லவர் இறைவன் என்பது வேதம் எமக்குக் கற்றுத் தரும் பாடம். ஒவ்வொரு சவாலையும் எதிர் காலத்துக்குரிய சந்தர்ப்பங்களாக மாற்றித் தருபவர் இறைவன். ஆகவே இந்நாட்களில் அவரிடம் நாம் உருக்கமாக மன்றாடுவோம். அவமானத்தின் சின்னமாகிய சிலுவையை மீட்பின் அடையாளமாக மாற்றிய இறைவன் எமது நாட்டையும் இன்றுள்ள அவல நிலையிலிருந்து மீட்டு வழிநடத்துவார் என்ற நம்பிக்கையோடு தளராது வேண்டுவோம்.

இளையோர் ஆண்டு

நடப்பாண்டை இளையோர் ஆண்டாக பிரகடனம் செய்திருந்தோம். இவ்வாண்டிலே பங்குகளிலும், மறை கோட்டங்களிலும், மறை மாவட்ட மட்டத்திலும் பல்வேறு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இவ்வாண்டை இளையோருக்கு பயனுள்ள ஆண்டாக பயன்படுத்த முயற்சிகள் எடுத்த அனைவருக்கும் பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்தும் இளையோர் உருவாக்கத்தில் கவனம் செலுத்துங்கள். இன்று இளையோர் சந்திக்கும் சவால்கள் அதிகம். அவற்றை எதிர்கொள்ள தொடர்ந்தும் அவர்களுக்கு ஆன்மீக, உளவியல் பலம் தேவைப்படுகிறது. இளையோரை வளப்படுத்துவது எதிர்காலத்தை வளப்படுத்துவதாகும். எதிர்வரும் ஜனவரி 12ம் திகதி இளையோர் ஆண்டை முடிவுறுத்தி அழைத்தல் ஆண்டை அங்குரார்ப்பணம் செய்ய இருக்கிறோம்.

அழைத்தல் ஆண்டு

இறை அழைத்தல் என்றதுமே குருத்துவ துறவற அழைப்புக்களைப் பற்றி மட்டுமே நாங்கள் சிந்திப்பதுண்டு. பொது நிலை அழைப்பை நாம் அழைப்பாகவே கருதுவதில்லை. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் கருத்துப்படி "எந்த நிலையிலும் பணிப்பொறுப்பிலும் இருப்பினும் கிறிஸ்தவ நம்பிக்கை கொண்டோர் அனைவரும் கிறிஸ்தவ வாழ்வின் முழுமைக்கும் அன்பின் நிறைவுக்கும் அழைக்கப் பெற்றிருக்கிறார்கள்" (தி. 40) ஆகவே இவ்வாண்டிலே பொதுநிலை அழைப்பை ஆழப்படுத்துவதில் அக்கறை செலுத்த வேண்டுமென வேண்டுகோள் விடுக்கிறேன். இன்று திருச்சபையில் மிகப் பெரும்பான்மையினராக இருக்கும் பொதுநிலையினர் திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் செயற்பாடுடனான பங்களிப்பை வழங்குவதை காண்பது அரிதாகவே உள்ளது.

"திருச்சபை ஆட்சியாளர்களோடு கூட எங்கு உண்மையான பொது நிலையினர் உடனிருந்து உழைக்கவில்லையோ, அங்கு திருச்சபை உண்மை யாகவே நிறுவப்படவுமில்லை. முழுமையாக வாழவுமில்லை, மனிதர் நடுவே கிறிஸ்துவின் அடையாளமாக துலங்கவுமில்லை எனச் சொல்லலாம்" (தி.ந.பணி. 21) என திருச்சபையின் நற்செய்திப் பணி என்னும் சங்க ஏடு குறிப்பிடுகிறது. திருச்சபையில் பொது நிலை அழைப்பின் முக்கியத்துவம் பற்றி இதை விட ஆணித்தரமாக குறிப்பிட முடியாது என்பது உண்மை. ஆகவே இவ்வாண்டிலே திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் பொதுநிலையினரின் பங்கேற்பை அதிகரிக்க கூடிய செயற்திட்டங்களை முன்னெடுக்கு மாறு பங்குத்தந்தையர்களையும் ஆலய அருள்பணிச் சபையினரையும் ஆணைக் குழுக்களையும் அன்போடு பணிக்கின்றேன்.

பக்திச்சபைகள்:

பாரம்பரியமாக திருச்சபையில் பொதுநிலையினரின் பங்களிப்பை அதிகரிக்க பக்தி சபைகள் பெரும்பங்காற்றி வருகின்றன. மரியாயின் சேனை, வின்சன்டிபோல் சபை, திருப்பாலத்துவ சபை போன்றவை ஆன்மீகத்தையம் பணியையும் ஒருங்கே பொதுநிலையினர் மத்தியில் வளர்க்கத் தக்கவை. இல்லாத பங்குகளில் இவற்றை உருவாக்குவதும், தளர்ந்து போயிருக்கக் கூடிய பங்குகளில் இவற்றுக்கு புத்துயிர் அளிப்பதும் அவசியமாகும். மேலும் பொருத்தமானதும் பயன்தரத்தக்கதுமான புதிய பக்திச்சபைகளை அறிமுகப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

**அன்பியங்கள்**

அதிகமான பொதுநிலையினரை பங்கேற்பு நிலைக்கு உயர்த்து வதற்கு அன்பியங்களை அறிமுகப்படுத்துதல் மிகச் சிறந்த வழியாகும். சில காலங்களின் முன் உற்சாகமாக எமது பங்குகளில் ஆரம்பிக்கப்பட்ட இந்த அன்பிய வாழ்வு படிப்படியாக தளர்வடைந்து செல்வதை அவதானிக்க முடிகிறது. அயலிலுள்ள கிறிஸ்தவர்கள் இணைந்து இறைவார்த்தையின் ஒளியிலும், இறைவேண்டலின் துணையிலும் தமது வாழ்வை அமைத்துக் கொள்ள அன்பியங்கள் வழிசமைக்கின்றன. ஆகவே பின்னடைவுக்கான காரணிகளை நுணுகி ஆராய்ந்து அவற்றை நிவர்த்தி செய்து அன்பியங்கள் மீள் எழுச்சி பெற உழைப்பது அருள்பணியாளர்களின் முக்கிய கடமை யாகும். எமது மேய்ப்புப்பணி மாநாட்டில் முன்னுரிமைப் பணியாக தெரிவு செய்யப்பட்ட அன்பிய வாழ்வை கட்டியெழுப்புவது எமது கடமையாகும். ஆகவே சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பையும் இவ்விடயத்தில் கவனத்தைக் குவிக்குமாறு பணிக்கின்றேன்.

அருட்பணிச் சபைகள்

ஆலயத் திருச்சபை, பங்கு, மறைக் கோட்டம், மறை மாவட்டம் என்கின்ற நான்கு நிலைகளில் அருள்பணிப் பேரவைகளை உருவாக்க வேண்டும் என்பது எமது மறைமாவட்ட திட்டமாகும். பல ஆலயத்திருச் சபைகளில் இவை உருவாக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகின்றன. ஆனால் பங்குமட்ட, மறைக்கோட்ட மட்ட அருள்பணிப் பேரவைகள் போதியளவு சிறப்பாக இயங்கவில்லை. பங்குத்தந்தையர்களும் மறைக்கோட்ட முதல்வர்களும் இவ்விடயத்தைக் கவனத்தில் எடுத்து தமது பங்குகளிலும் மறைக்கோட்டங்களிலும் பேரவைகளை உருவாக்கி வழிநடத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். எல்லா மறைக் கோட்டங்களிலும் பேரவைகள் உருவாகியிருந்தாலே மறைமாவட்ட பேரவையை உருவாக்க முடியும். பொதுநிலையின ருக்கு சிறந்த பங்கேற்பு வாய்ப்பை ஏற்படுத்தும் அருள் பணிப் பேரவைகளை இந்த ஆண்டிலே சிறப்பாக இயக்குவதற்கு ஆவன செய்யுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

**நற்கருணை பணியாளர்:**

பொதுநிலையினர் தமது மாண்பை உணர்ந்து திருச்சபையில் பணியாற்றுவதற்கு நற்கருணைப் பணியாளர்களை உருவாக்க வேண்டுமென நாம் தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்து வருகிறோம். ஆயினும் பல பங்குகளில் பொதுநிலையினர் தமக்குரிய மாண்பை உணராததனாலே இவ்விடயத்தில் தயக்கம் காட்டுகின்றனர். ஆகவே தமக்கு தரப்படும் அரிய சந்தர்ப் பத்தைப் பயன்படுத்தி பொதுநிலையினர் நற்கருணைப் பணியாளர்களை தமது பங்குகளில் உருவாக்கிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொதுநிலையினர் உருவாக்கம்:**

பொதுநிலையினர் தமக்கே உரித்தான வகையில் புனிதப்படுத்தும், போதிக்கும், வழிநடத்தும் முப்பணிகளில் பங்கெடுக்க அவர்களுக்கு தகுந்த உருவாக்கம் தேவைப்படுகிறது. ஆகவே பொதுநிலையினர் கழகம், புனித யோசவ்வாஸ் இறையியல் கல்லூரி போன்றவை இவ்வாண்டில் சிறப்பு திட்டங்களை வகுத்து பொதுநிலையினர் இறையறிவில் முன்னேற செயற்பட வேண்டிக் கொள்கிறேன்.

"உலகு சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபட்டு உழைக்குங்கால், அவற்றைக் கடவுளின் திட்டப்படி நெறிப்படுத்துவதன் மூலம் கடவுளின் ஆட்சியை அமைக்க தேடுவது தங்களது தனிப்பட்ட அழைப்பால் பொதுநிலையினரைச் சார்ந்தது" (தி.31) இவ்வாறு கூறும் இரண்டாம் வத்திக்கான் சங்கம், குடும்பம், பணியிடம், சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டு வாழ்நிலைகள் என்பவற்றில் பொதுநிலையினர் கிறிஸ்துவுக்கு சான்று பகர்ந்து இறையாட்சியை அமைக்க உழைப்பதன் மூலம் தமது நற்செய்தியறிவிப்பு பணியை நிறைவேற்ற வேண்டுமென அழைப்பு விடுக்கிறது. ஆகவே பொதுநிலையினரின் எழுச்சியே திருச்சபையின் வளர்ச்சி என்பதைக் கருத்திற் கொண்டு இவ்வாண்டுக்குரிய செயல்திட்டங்களை முன்னெடுக்குமாறு அனைவரையும் வேண்டி நிற்கின்றேன்.

**பிறக்க இருக்கும் பாலக இயேசு எம்மை வழிநடத்துவாராக! அன்னை மரியின் பரிந்துரை எமது அனைத்து பணிகளிலும் துணையிருப்பதாக!**

## இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் நத்தார் செய்தி - 2018

நத்தார் இறைமகனான இயேசுக்கிறிஸ்து பெத்லகேம் எனும் ஊரில் இறைவனின் அன்புடன் மனித வரலாற்றில் அவதரித்தமையாகும். இந்த மறைபொருளின் மூலம் கடவுள் மனித குலத்திற்காக அவரது பெருகிய அன்பின் ஆழத்தை நமக்கு வெளிப்படுத்தினார். 'தம் ஒரேமகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்" (யோவா 3:16) இயேசுவினது வருகை மூலம் அவரது வாழ்வை இவ்வுலக மக்களுடன் பகிர்ந்து, அவர் தனித்து நின்றுஎமது நிறைவுக்காக அவரை அர்ப்பணித்தார். (யோவா 10:10) இவ்வாறு இயேசு நம்மை பின்தொடர்ந்து நம்முடன் வசிக்கின்றார். இயேசுவுக்கு இம்மானுவேல் எனப் பெயர் கொடுக்கப்பட்டமை 'கடவுள் நம்மோடு இருக்கின்றார்" என்பதை நினைவுறுத்தவே ஆகும்.

எமது நத்தார் கொண்டாட்டங்களானது எமது இறந்தகால நிகழ்வுகளை நினைவு கூறுவதாக இருக்காது. வாழ்வின் உண்மையான அர்த்தத்தைப் புரிந்து கொண்டு, எமது சமூகத்தில் முழுமனதுடன் சாட்சிய வாழ்வு வாழ்வதைப் பற்றி ஆழமாக புரிந்துகொள்ளும் கொண்டாட்டமாகும்.

நத்தார் பண்டிகையானது, இயேசுவை எமது வாழ்க்கைக்கு, குடும்பங்களுக்கு, சமூகத்துக்கு அழைக்கும் தேவையை நினைவுறுத்துகின்றது. இயேசுவின் எளிய பெத்லகேம் பிறப்பானது நாம் வேறுபாடுகள் இன்றி மற்றவர்களின் தேவைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கும் ஓர் உலகளாவிய அழைப்பு விடுக்கின்றது.

இது ஓர் வெளிப்புற கொண்டாட்டத்தை மட்டும் உருவாக்குவதாக அமையாது இயேசுக்கிறிஸ்துவை கடவுள் என்றும் அவரே எம்மை மீட்க வந்த மீட்பர் எனவும்நாம்எமதுஉள்ளத்திலிருந்துஏற்றுக்கொள்ளும்போதுதான் நத்தாரின் உண்மையான மகிழச்சி மிளிரும்.

நாம் பல இரக்கச் செயல்களில் ஈடுபடும்போது எமது நாட்டிலுள்ள எளிமையான மக்களின் தேவைகள் குறித்து மிகுந்த கவனம் செலுத்தி தாழ்வுள்ளத்துடன் அவர்களுக்கு உதவவேண்டும். பொதுவான நன்மைகளை தடுக்கக்கூடிய வேறுபாடுகளை மறந்து, அமைதி, ஒற்றுமை, சமத்துவம் ஆகியவற்றின் முகவர்களாக இருப்பதன் மூலம், இறைவனின் திட்டத்திற்கு ஏற்ப அமையாத அனைத்தையும் மாற்றியமைப்போம். இனிய வாழ்க்கையை எமக்கு பரிசாகத் தந்த இறைவனுக்கு நன்றி செலுத்துவோம். இறைமக்கள் அனைவருக்கும் சக குடிமக்களுக்கும், ஆசீர்வதிக்கப்பட்ட இனிய நத்தார் வாழ்த்துக்கள்.

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## மெசியாவின் பிறப்பு - விடுதலையின் விழா

இ.அ.அமலரட்னம்

### முகவுரை

**"இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். இன்று ஆண்டவராகிய மெசியா எனும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கின்றார். (லூக்.2:10-11)** என்ற வானதூதரின் அறிவிப்பு எம் எல்லோருக்கும் பெரு மகிழ்வையும் குறைவில்லா ஆனந்தத்தையும் தருகின்ற நற்செய்தியாக அமைகின்றது. இற்றைக்கு 2018 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற மிக உன்னதமான நிகழ்வு வார்த்தை மனுவுருவாகி மாடடைக் குடிலில் பிறந்த நிகழ்வாகும். காலம் காலமாக மெசியாவைக் காணவேண்டும் என்று காத்திருந்த மக்கள் நடுவே வானகத் தந்தையின் அன்புமகன் என்றும் கன்னிகையான புனித மரியாவிடம் பிறக்கின் றார். அவரது மனித அவதாரம் பாவத்தின் இருள் சூழ்ந்திருந்த உலகிற்கு அருள் ஒளியையும். அடிமைத்தனத்தில் வாழ்ந்திருந்த மக்களுக்கு உரிமைக்கான விடுதலையையும் பெற்றுக்கொடுத்தது. மீண்டும் ஒரு முறை நாம் சந்திக்கும் கிறிஸ்து பிறப்பு விழாவை என்ன மனநிலையில் கொண்டாடப் போகின்றோம்?



### விடுதலை வேண்டும்

இன்று உலகில் வாழும் மக்கள் அனைவரும் தாம் வாழும் நாடுகளில் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தபடியே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். பெரும்பான்மையினம் தம் நாட்டில் வாழும் சிறுபான்மை இனத்தை அடிமையாக எண்ணி துன்பங்கள் கொடுப்பது ஒரு சாதாரண நிகழ்வாக அமைகின்றது. உயர் குடியினர் தாழ்ந்த ஜாதி மக்களை ஒதுக்கி வைப்பதும் அவர்களின் மகிழ்ச்சியான சுதந்திரமான வாழ்வுக்கு குந்தகம் விளைவிப்பதும் இன்று சர்வசாதாரணமாகி விட்டது. **"இருளிலும் இறப்பின் பிடியிலும் இருப்போர்க்கு ஒளி தரவும் நம்முடைய கால்களை அமைதி வழியில் நடக்கச் செய்யவும் நம் கடவுளின் பரிவுள்ளத்தாலும் இரக் கத்தாலும் விண்ணிலிருந்து விடி யல் நம்மைத் தேடி வருகின்றது" (லூக். 1:78-79)** என்ற இறை வார்த்தை எமக்கு நம்பிக்கையையே அளிக்கின்றது. மனிதர் அனைவருக்கும் சாதி. மத. இன. மொழி பேதமின்றி இறைவன் எமக்குத் தந்த ஒரே மீட்பர் இயேசுக்கிறிஸ்து மட்டுமே. இவரே எமக்கு விடுதலை தரக்கூடியவர் என்பதையும் உணர்ந்துகொள்ளுவோம். எமது உள் ளத்தில் குடில் அமைத்து பாலக இயேசுவை பிறக்க வைத்து விடுதலையின் கருவிகளாக வாழ முயற்சி எடுப்போம்.

### சுயநலத்திலிருந்து விடுதலை

இன்று எங்கு பார்த்தாலும் நான் எனது என்ற நிலை மேலோங்கி சுயநலம் நிறைந்த செயற்பாடுகள் அதிகம் காணப்படுகின்றது. ஒரு மனிதனின் தனிப்பட்ட வாழ்விலும் சரி. சமூக வாழ்விலும் சரி. அரசியல் ஆன்மீக வாழ்விலும் சரி இது குறைவதாக இல்லை. ஒருவருடைய நற்பெயரைக் கெடுப்பதும் அவனுடைய பதவிகளுக்கு ஆப்பு வைப்பதும் அதிகம் காணப்படுகின்றது. சிற்றூழியர் தொடங்கி மேலதிகாரிகள் வரை ஊழலும். கையூட்டும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இவையெல்லாம் இறை மகன் இயேசுவின் மனித அவதாரத்தின் ஊடாக இறைவன் கொண்டுவர விரும்பிய இறையரசுக்கு எதிரானவை. **"அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்போது இவை அனைத்தும் உங்களுக்கு சேர்த்துக் கொடுக்கப்படும்" (மத். 6:33)** இவ்வுலக ஆட்சியையும் தலைமைத்துவ வழிநடத்தல்களையும் இறைவனுக்கு உகந்ததாக முன்னெடுப்பதன் மூலம் நாம் கிறிஸ்து பிறப்பு விழாவுக்கு அர்த்தம் கொடுக்க முன்வருவோம். மனமாற்றம் இல்லாமல் புதிய வாழ்வை அமைத்துக் கொள்ளாமல் கிறிஸ்து பிறப்பு விழாவை உண்மையாகக் கொண்டாட முடியாது. **"பாவமன்னிப்பு அடைய மனம் மாறி திருமுழுக்குப் பெறுங்கள்" (லூக். 3:3) "ஏற்கனவே மரங்களின் வேரருகே கோடரி வைத்தாயிற்று. நற்கனி தரா மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டு தீயில் போடப்படும்" (லூக். 3:9)** என்ற இறைவார்த்தைப் பகுதிகள் மனமாற்றத்தின் அவசியத்தையும் மனம் மாறா விட்டால் கிடைக்கும் எதிர் விளைவையும் எடுத்தியம்புகின்றன. எளிமையும். சகோதர அன்பும் நீதியும் உள்ள இதயங்களில் தான் பாலக இயேசு பிறப்பார் என்பதை உணர்ந்து வாழ்வை முன்னெடுப்போம்.

### குடும்பங்கள் விடுதலைபெற வேண்டும்

ஆதிப்பெற்றோர் ஆதாம் ஏவாளாக (குடும்பமாக) இணைந்து செய்துகொண்ட பாவம் முழுமனுக்குலத்தையும் பாதித்தது. **"அந்த மரம் உண்பதற்கு சுவையானதாகவும் கண்களுக்கு களிப்பூட்டுவதாகவும், அறிவு பெறுவதற்கு விரும்பத்தக்கதாகவும் இருந்ததைக் கண்டு பெண் (ஏவாள்) அந்தப் பழத்தைப் பறித்து உண்டாள். அதைத் தன்னுடன் இருந்த கணவனுக்கும் ( ஆதாம்) கொடுத்தாள். அவனும் உண்டான்" (தொ.நூ.3:6)** ஆதிப்பெற்றோரின் பாவத்தால் முழு மனுக்குலமும் அருளுயிரை இழந்ததுபோல இன்று குடும்பங்கள் பாதிக்கப்பட்டு சீரழிந்து போவதால் திருமறையும். சமுதாயமும் இறையருளை இழந்து போகின்றன. பெற்றோர் (கணவன் - மனைவி) தங்கள் குடும்பம் சார்ந்த அழைத்தலில் பிரமாணிக்கம் இல்லாமல் வாழ்வதாலும் கடமைகள். பொறுப்புக்களிலிருந்து தவறிப் போவதாலும். பிள்ளைகளின் உருவாக்கத்தில் தோற்றுப் போவதாலும் இந்நிலை ஏற்படுகின்றது. உலகப் போக்கு அதனால் ஏற்படும் ஊன் இயல்பின் இச்சைகள். குடும்பமாக செபிக்காமை. இறைவார்த்தையின் ஒளியில் வாழாமை போன்ற குறைபாடுகள் குடும்பங்களை அழிக்கின்றன. **"நாம் ஒன்றாய் இருப்பதுபோல அவர்களும் ஒன்றாய் இருக்குமாறு நீர் எனக்கருளிய மாட்சியை நான் அவர்களுக்கு அளித்தேன்" (யோவான் 18:22)** என்ற இறைவார்த்தைக்கு ஒப்ப கணவனும் மனைவியும் ஒன்றாக அன்பில் இணைந்திருந்து இறைமகன் இயேசுவைத் தலைவராகவும் மீட்பராகவும் ஏற்றுக்கொண்டால் எல்லாப் பிரச்சினைகளிலிருந்தும் விடுதலை பெற்று ஆன்மீக வாழ்வுக்குள் புதுப்பிக்கப் படுவதோடு. கிறிஸ்து பிறப்பு விழாவும் அர்த்தம் உள்ளதாக மாறும். **"உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக" (லூக்.2:14)** என்ற இறைவார்த்தை குடும்பங்களில் நிறைவேறும்.

### இளையோரின் விடுதலை

இன்று உலகத் திருச்சபையும் சரி. ஆன்மீகத் தலைவர்களும் சரி இளையோரின் போக்கில் அதிருப்தி அடைந்து அவர்களின் ஆன்மீகத்திற்காகவும். ஒழுக்கத்திற்காகவும் குரல் கொடுக்கின்றனர். அவர்கள் தவறான போக்கிலிருந்து விடுபடுவதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கின்றனர். காலம் நிறைவேறியபோது தன்னுடைய திருமகனை பெண்ணிடம் பிறந்தவராக இறைவன் அனுப்புகின்றார். **"உலகிற்கு தண்டனைத் தீர்ப்பு அளிக்க அல்ல தன் மகன் வழியாக அதை மீட்கவே கடவுள் அவரை இவ்வுலகிற்கு அனுப்பினார்" (யோவான் 3:16-17)** அடிமைத் தனத்திலிருந்து உண்மையான விடுதலைக்கும் தன்னலத்திலிருந்து உண்மையான அன்பிற்கும் வளர கிறிஸ்து பிறப்பு விழா எம்மை அழைக்கின்றது. விஞ்ஞான வளர்ச்சியும். சமூக தொடர்பு சாதனங்களின் அதிநவீன கண்டுபிடிப்புக்களும் போதைப்பொருள் பாவனையும். வெளிநாட்டுக் கலாசாரமும் இன்று இளையோரின் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அடுத்திருப்போர் மீது அக்கறையில்லாத செயற்பாடுகளும். பெற்றோர் பெரியோர். ஆசிரியர். ஆன்மீகத் தலைவர்களை மதிக்காத தன்மையும் மேலோங்கிக் காணப்படுகின்றது. எனவே இளையோர் அலைகயின் கட்டுக்களிலிருந்தும் தீய நாட்டங்களிலிருந்தும் விடுபட அவர்களுக்கு வழிகாட்டிகளாகவும் வாழ்ந்து காட்டுபவர்களாகவும் நாங்கள் மாறுவோம். கிறிஸ்து பிறப்பு விழாவுக்கு அர்த்தம் கொடுக்க இக்காலங்களில் குடும்ப ஆன்மீகத்தை வளர்த்து செப வாழ்வு. இரக்கம், அன்பு. பகிர்வு போன்றவற்றைக் கற்றுக்கொடுப்பதோடு ஆலயத்தோடும் திருச்சபையோடும் இருக்கும் தொடர்பு களை ஊக்கப்படுத்துவோம். **"வாக்கு மனிதனானார் நம்மிடையே குடிகொண்டார்" (யோவான் 1:16)** என்ற இறைவார்த்தையிலும் **"அனைத்து மனிதர்களையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளியாக இயேசு உலகிற்கு வந்தார்" (யோவான் 1:9)** என்ற இறைவார்த்தையிலும் நம்பிக்கை வைத்து இளையோரின் மனமாற்றத்திற்காகவும், ஆன்மீக புதுப்பித்தலுக்காகவும் பாலக இயேசுவிடம் மன்றாடுவோம்.

### கடின மனத்திலிருந்து விடுதலை

இன்று மானிட சமுதாயத்தை உற்று நோக்கும்போது கடின மனம் உள்ளவர்களாகவே வாழ்ந்துகொண்டிருக்கிறோம். மனிதனையும் மனித மாண்பினையும் மதிக்காத தன்மை அதிகரித்துக் காணப்படுகின்றது. அடுத்தவனுக்குத் துன்பம் ஏற்படும் என்று தெரிந்தும் சுயநலத்தோடு நாம் பல செயல்களைச் செய்து முடிக்கின்றோம். இன்று எமது நாட்டில் வன்முறைக் கலாசாரம் மேலோங்கி அப்பாவி மக்கள் துன்பங்களுக்கு முகம் கொடுக்கின்றனர். ஆட்சியாளர்களினதும் நீதித்துறையினரினதும் கடின உள்ளத்தால் பல இளையோரும் குடும்பத் தலைவர்களும் வருடக்கணக்காக சிறையில் வாடுகின்றனர். சொந்த மண்ணில் சொந்த வீட்டில் குடியேற முடியாமல் வருடக்கணக்காக உரிமைக்காக மக்கள் வீதியில் இறங்கிப் போராடுகின்றனர். மகிழ்ச்சியும். அன்பும். பகிர்வும் கொண்ட விடுதலையின் விழாவாக கிறிஸ்து பிறப்பு விழாவை எதிர்கொள்ளும் இவ்வேளையில் எமது மக்களின் சமகால வாழ்வு துன்பமும் துயரமும் மிக்கதாக அநீதி நிறைந்ததாக உள்ளதை நாம் காணுகின்றோம். உண்மையிலேயே கிறிஸ்து பிறப்பு விழா விடுதலையின் விழாவாக அமைய வேண்டுமாக இருந்தால் கடின மனம் அனைத்தும் கனிந்த உள்ளங்களாக மாறவேண்டும். காணாமல் போனோர் விவகாரம் ஒரு நல்ல முடிவுக்கு வரவேண்டும். அரசி யல் கைதிகள் நீதியோடும். உண்மையோடும் நடத்தப்பட்டு விடுதலை செய்யப்படவேண்டும். அரச படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளும். வீடுகளும் விடுவிக்கப்படவேண்டும். **"கடவுள் நம்மோடு இருக்கின்றார். (இம்மானுவேல்)** என்ற நம்பிக்கையோடு **"ஆண்டவரின் காலத்தில் நீதி தளைத்தோங்கும்" (தி.பா. 72:7)** என்ற இறைவார்த்தையில் நம்பிக்கை வைத்து செபிப்போம்.

### நிறைவாக

பாலக இயேசு இந்த உலகத்தில் பிறந்தபோது உலகம் மகிழ்வால் நிரம்பி வழிந்தது. உள்ளங்களில் இறைவனின் அமைதி குடிகொண்டது. அனைத்து துன்பங்களில் இருந்தும் தீய செயற்பாடுகளிலிருந்தும் நாம் விடுபட பாலக இயேசுவி டம் மன்றாடுவோம். அதன் மூலம் துன்புறும் உள்ளங்களுக்கு மகிழ்வையும். அமைதியையும் கொடுப்போம். எமக்கென எல்லாவற்றையும் பெற்றுக்கொள்வதை மறுத்து. மற்றவர்களுக்குக் கொடுப்பதிலும் எம்மைப் பாதுகாத்துக் கொள்வதிலும் பார்க்க மற்றவர்களுக்காக எம்மை இழப்பதிலும் எமது வாழ்வை முன்னெடுப்போம். **" ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது. ஏனெனில் அவர் எனக்கு அருட்பொழிவு செய்துள்ளார். ஏழை களுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர். பார்வையற்யோர் பார்வை பெறுவோர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார்" (லூக் 4:18-19)** என்ற இறைவார்த்தையின் படி அனைத்திலும் நாம் விடுதலை பெற பாலக இயேசு அருள்புரிய மன்றாடுவோம்.

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்



# கிறிஸ்மஸ்?

**முகவுரை**

எமது இன்றைய வாழ்வு...கனத்து நிற்கும் மனங்களும், கவலை தோய்ந்த முகங்களும், கண்ணீர் மல்கும் கண்களும், கரைந்துருக்கும் நோய்களும் அனைத்திற்கும் மேலாக மானிட விடுதலைக்காக ஏங்கி எழும் விம்மல்களும், பெருமூச்சுக்களும் இவற்றின் மத்தியிலும் நாம் எதிர்பார்த்திருக்கும் கிறிஸ்மஸ் தரும் செய்தி என்ன?

கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சி என்பது வாழ்க்கையை மறந்து பாட்டுப் பாடுவதிலும், குடித்துக் கூத்தாடிக் கொண்டாடுவதிலும் அடங்குவதில்லை. குதூகலமெல்லாம் கிறிஸ்மஸ் அல்ல. கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சி வாழ்க்கையின் மகிழ்ச்சி. வாழ்வின் இறைவனைக் கண்டு கொள்வதனால் ஏற்படும் மகிழ்ச்சி. கிறிஸ்மஸ் ஒரு பயணம். ஒரு தொடர் நிகழ்ச்சி. மேற்குறிப்பிட்ட மனித அவலங்கள் மத்தியில் அர்ப்பணத்தோடு ஈடுபாடு கொண்டு உழைக்க, மனிதத்தை மீளக் கட்டியெழுப்ப இறைமகன் இயேசு விடுக்கும் உன்னத அழைப்பு. கிறிஸ்து பிறப்பின் சூழலைப் பார்த்தால் அடிமைத்தனமும், விடிவே இல்லாதது போன்ற இருளான அங்கலாய்ப்பும் நிறைந்த ஒன்று. உலகப் போக்குகளின் ஆதிக்கங்கள் தலைதூக்கி நின்றநேரம். இன்றைய சூழல் எப்படியோ அதேபோன்றுதான் அன்றும். பின்வரும் விவிலிய நிகழ்வுகளை எடுத்து நோக்கி இன்று அவை நம்மிடம் வேண்டி நிற்கும் அழைப்பு, ஈடுபாடு என்னவென்று ஆராய்வோம்.

**நாசரேத்திலிருந்து பெத்லகேம்**

இருளும், அடிமைத்தனமும், கொடூரமும் நிறைந்த நாட்களில்தான் நாசரேத்திலிருந்து பெத்லேகெமிற்கு பயணம் தொடங்கியது. "நாசரேத்து" என்றால் எவ்வித நன்மையும் இங்கிருந்து ஏற்படாது என்று கருதப்பட்ட இடம். "நாசரேத்திலிருந்து நல்லது எதுவும் வரமுடியுமோ?" (யோவான் 1:46) "பெத்லகேம் என்றால் அப்பத்தின் வீடு. வாழ்வும், சமாதானமும் தரும் இறைவனைத் தேடும் இடம் என்று பொருள். குழந்தைகள்தான் ஓரேயொரு அடையாளம். அதாவது மனித பலம் ஒன்றுமில்லை. இறை பலம் ஒன்றுதான் நமக்கு நம்பிக்கையும், சமாதானமும் தரும் என்று உணர்த்திய சூழல். எனவே இங்கிருந்து ஏதாவது நன்மை ஏற்படக் கூடுமோ என்ற நாசரேத்து என்னும் எமது மனித நிலையிலிருந்து ஆண்டவர் நமக்கு வாழ்வும், சமாதானமும் தருகின்றார் என்ற "பெத்தலேகேம்" எனும் நிலைக்கு நாம் பயணம் செய்யும் ஒவ்வொரு முறையும் எமது வாழ்வில் கிறிஸ்மஸ் நடைபெறுகிறது.

**முதல் கிறிஸ்மஸ்**

பாலனைக் கண்டு மகிழ்ச்சியை அனுபவித்த முதல் கிறிஸ்மஸ் கூட்டம் யாரென்றால் கன்னிப் பெண்ணாக இருந்து கருத்தரித்து தனது பிரசவத்தை வீதியோரத்திலே காணும் அவமானத்தை அனுபவித்த கன்னி மரியாவும் அவரது அங்கலாய்புக்கள் அனைத்தையும் சுமந்து நின்ற அவருடைய கணவர் சூசையப்பரும், வானமே எங்கள் வீட்டுக் கூரை என்று வெட்டவெளியில் கிடந்த ஏழை இடையர்களுமே. ஆம், தமது அன்றாட வாழ்க்கை நிலையைஅவலங்களை ஏற்றபொழுதுதான் அவர் களுக்கு அங்கே இயேசு பிறந்தார். மகிழ் வைக் கொடுத்தார். நமது அன்றாட அனுபவங்களை இறையனுபவமாக ஏற்கும் பொழுதுதான் நாமும் இறைவன் தரும் மகிழ்ச்சியை அனுபவிக்கின்றோம். நமது உள்ளத்தில் இயேசு பிறக்கின்றார். "கடவுள் நம்மோடு" இருக்கின்றார். அர்த்தத்தைக் கொடுத்து வழி நடத்துகிறார்.

**கிறிஸ்மஸ் ஒரு பயணம்**

எமது அன்றாட வாழ்விலே இறைவனின் பிரசன்னத்தை உணர்ந்து, அவரது வழிநடத்தலில் நிறைவையும் மகிழ்ச்சியையும்அனுபவித்து, அதைப் பிறருடன் பகிர்ந்து வாழ்வதே கிறிஸ்மஸின் அழைப்பு, கிறிஸ்மஸ் மகிழ்ச்சி.

வாழ்வுச் சூழல் நாம் எதிர்பார்ப்பது போன்று என்றும் சுமுகமாயிருப்பதில்லை. மரியா, சூசையப்பர்,இடையர்களின் வாழ்வு போன்று மேடுபள்ளங்கள், முரண்பாடுகள், சவால்கள் நிறைந்தவை. இச் சூழ்நிலைகளில் மனித அவ நம்பிக்கையிலிருந்து இறை நம்பிக் கைக்குப் பயணிக்கும் ஒவ்வொரு முறையும் எமது வாழ்வில் கிறிஸ்மஸ் இடம்பெறுகிறது. மனிதன் தனது அவ நம்பிக்கையின் அடித்தளத்திற்குச் செல்லும்போதுதான் இறைவன் வந்து நம்மைக் கைதுக்குகின்றார். ஏனென்றால், இறைவன் தாமே நம்மைக்கைதூக்கினார் என்பதை நாம் உள்ளூர உணரவேண்டும்.

**"எருசலேம் - ஜெருஷலேம்" சமாதானத்தின் நகரம்**

பெத்லேகெமில் இயேசுவுடன் ஆரம்பிக்கும் பயணம் சமாதானத்தின் நகரம் எனப்படும் ஜெருசலேம் வரை செல்லும்போதுதான் இச்சமாதானம் நடைமுறை வாழ்வில் நாமனுபவிக்கும் சமாதானமாக, முதிர்ச்சி பெற்ற சமாதானமாக, தியாகம் எனும் மரத்தில் மலரும் சமாதானமாக அமையும். இயேசு தனது பாடுகள், மரணம், உயிர்ப்பின் மூலமாகத் தான் - அதாவது தன்னையே முழுமையாக பலியாக்கியதன் மூலம் தான் எமக்கு முழுமையான சமாதானத்தை, புதுவாழ்வைப் பெற்றுத் தந்தார்.

பணம் பொருளைவிட மனிதனை நமது உள்ளத்தின் அடி ஆழத்தில் பெரிதாக மதிக்கும்போது, அண்ணார்ந்து பார்க்க நாம் ஆசைப்படும் இறைவன், "கடவுள் நம்மோடு" (இம்மானுவேல்) என்று உறுதியாய் உணரும்போது, "அவர் செல்வமிக்கவராய் இருந்தும் உங்களுக் காக ஏழையானார்" (2கொரி 8:9) என்பதை அறியும்போது நம்பிக்கை எனும் விளக்கு துன்பப்புயலில் அணைந்து போகும் வேளைகளில் நமது இரவுகளை ஒளிர்விக்கும் சுடர் விளக்காக இயேசு வருகிறார் என்று நம்பும்போது, பாலன் குடிலின்முன் கண்ணீர் சொரியும் எமது கண்கள் குடிசையிலுள்ள ஏழைகள், நோயுற்றோரையும், சிறைகளில் அடைக்கப்பட்டோரையும் கண்டு நெஞ்சம் நெகிழும் போது, அங்குள்ள குடிசைகளின் குட்டையான வாசல்களினூடாக தலை குனிந்து செல்லும்போது, ஏதிலிகளாய் ஆக்கப்பட்ட உலகமெங்குமுள்ள எண்ணிலடங்கா மக்களோடு எமக்குள்ளதைப் பகிர்ந்து வாழும்போது, மற்றவர்களோடு நாம் கொண்டுள் ள அன்பும் உறவும் கபடமற்ற, தூய்மையான, தியாகம் நிறைந்த அன்பாக மலரும்போது, வளரும்போது, இயேசு நமது உள்ளங்களில் பிறக்கிறார் - நமக்கு இதுவே கிறிஸ்மஸ்.

**முடிவுரை**

இயேசுவின் பிறப்பு அனைத்து மனிதர்களும் வாழ்வில் ஈடுபாடு கொள்வதற்கு விடுக்கும் அன்பின் அழைப்பு. அன்று இடம்பெற்ற வரலாற்று நிகழ்வை இன்று நாம் நமது வாழ்வாக்க விடுக்கும் அழைப்பு. கடவுளின் மனித வருகை, மனிதனை இறைவனாக்க மட்டுமன்று, அவனை முழு புது மனிதனாக்கவும் தான். கிறிஸ்மஸ் இறைவனின் அன்பை எமக்கு உணர்த்தும் விழா. இறைனின் அண்மையை, அந்த அண்மைஉணர்த்தும் தூய்மை, அன்பு, நம்பிக்கை, உண்மை, நீதி, சமாதானம் என்பவற்றை இன்று மனிதர் ஒவ்வொருவரும் தம் வாழ்வில் மெய்மையாக்க நம் ஒவ்வொருவருக்கும் விடுக்கப்படும் சவால்கள் நிறைந்த அழைப்பு. இவ்வாறான, அர்த்தமுள்ள கிறிஸ்து பிறப்பைக் கொண்டாடவே பாலகன் இயேசு நம் ஒவ்வொருவரையும் அழைக்கின்றார்.

**அருட்பணி**
**மா.றேஜிஸ் இராசநாயகம்**

# பகிர்தலின் மேன்மை

ஞானி ஒருவர் காட்டிலே வசித்து வந்தார். இவருக்குப் பல சீடர்கள் உண்டு. இவரிடம் சீடனாக சேருவதே பெரிய பாக்கியம் எனக் கருதினர். ஒரு நாள் இரண்டு இளைஞர்கள் இவரது முன்மாதிரி கைகளைக் கண்டு அவரது சீடராக விரும்பி அவரிடம் வந்தனர். ஒருவன் பெயர் ஜீவா, மற்றவன் பெயர் தயாளன். ஞானியின் பாதம் தொட்டு வணங்கி தமது விருப்பத்தை தெரிவித்தனர். ஞானி இருவரையும் உற்று நோக்கி "நான் ஒரு சோதனை வைக்கப்போகிறேன். அதிலே யார் வெற்றி பெறுகிறாரோ அவரையே என் சீடனாக ஏற்றுக் கொள்வேன்" என்றார். இருவரும் உடன்பட்டனர். ஞானியோ அவர்களிடம் நீங்கள் இருவரும் 30 நிமிடங்கள் வெளியே சுற்றி வர வேண்டும். எதிர்ப்படுகிற எழைகளுக்கு இயன்ற உதவிகளை செய்ய வேண்டும். யார் அதிகபட்சம் உதவி செய்கின்றாரோ அவரை என் சீடனாக்குவேன் என்றார்.

தயாளனும் ஜீவாவும் தலை வணங்கி வெளியே சென்றனர். கொஞ்ச நேரமாக எந்த ஏழையும் தென்படவில்லை. கடைசி நேரத்தில் ஓர் ஏழை மனிதனைக் கண்டனர். "ஐயா, உங்களுக்கு என்ன வேண்டும்" என விசாரித்தனர்.

"என் மகன் உடல் நலக் குறைவாக இருக்கிறான். அவனுக்கு மருந்து வாங்க என்னிடம் பணம் இல்லை" என்றான். உடனே தயாளன் தன்னிடமிருந்த 500 ரூபாவையும் எடுத்து முகமலர்ச்சியுடன் கொடுத்துவிட்டான். சற்று நேரத்தில் இன்னொரு ஏழை முக வாட்டத்துடன் நின்றான். "ஐயா உங்களுக்கு என்ன பிரச்சினை" என வினவினர்.

"என் மகளுக்கு புத்தகப்பை வாங்க வேண்டும் பணம் போதாதுள்ளது. விலை வாசியும் உயர்ந்துவிட்டது" என்றான். உடனே ஜீவா தன்னிடமிருந்த 500 ரூபா பணத்தில் 300 ரூபாவை அந்த ஏழைக்கு கொடுத்தான்.

இருவரும் ஆவலுடன் ஞானியின் இருப்பிடத்திற்கு சென்றனர். ஞானியோ! "தயாளன் தான் என் சீடன்" என்றார். தயாளன் தன்னிடமுள்ளதையே கொடுத்துவிட்டான். ஜீவாவோ தன்னிடமுள்ளதில் ஒருபகுதியையே கொடுத்தான் என்றார். பிறருக்கு உதவி செய்யும் போது முழுமனதுடன் செய்யவேண்டும். பகிர்தல் மனப்பான்மை, பரிவு போன்ற நல்ல எண்ணங்களோடு உதவி செய்வதே நல்லது. பிறரோடு பகிர்ந்து கொள்ளும் போது அன்பு வெளிப்படுகின்றது. ஒருவர் நலனில் அக்கறை காட்டும் போது அன்புறவு உணரப்படுகிறது.



முகமலர்வுடன் ஏழைகளுக்கு கொடுக்கிறவன் கடவுளுக்கு கடன் கொடுக்கிறான். வட்டியும் முதலுமாக சேர்த்துத் திருப்பிக் கொடுக்கப்படும்.

மீண்டுமொரு கிறிஸ்மஸ் கொண்டாட்டத்திற்காக இப்போது யாழ்ப்பாணம் பெருமெடுப்பில் விழாக்கோலம் பூண்டுள்ளது. அர்த்தமற்ற ஆடம்பரக் களியாட்டங்களுக்காக பெருந்தொகைப் பணம் செலவிடப்படவுள்ள நிலையில் இன்றும் எம் மண்ணிலே போரினாலும் இயற்கை அனர்த்தங்களாலும் துன்பப்படுபவர்கள், சிறையிலே வாடுவோர், ஏதிலிகளாக நடமாடும் மனிதர்கள் என்று பட்டியல் நீண்டே செல்கின்றனது. அவர்களுக்கும் இரக்கம் காட்டுவோம். எம்மிடம் உள்ளதை பகிர்வோம். முகமலர்வுடன் அவர்களுக்கு உதவிட முன்வருவோம். அப்போது தான் பாலன் இயேசு எமது இதயக்குடிலில் பிறப்பார். இத்தகைய பகிர்தலை புரிதலுடன் செய்வோமாக.

**செல்வி. சாளினி றஞ்சித்குமார் (தரம் - 13)**
**யா/ கொழும்புத்துறை இந்து ம.வி**

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## வேதாகமத்தின்படி மனச்சாட்சிதான் உண்மையின் தீர்ப்பு

### உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை புகழ்ந்து கொண்டாடுவோர், ஈழத் தமிழர்களின் விடுதலைக்கான தீர்வை வழங்க தங்கள் மனச்சாட்சியைத் தட்டியெழுப்புவார்களா?

வேதாகமத்தின்படி கூறுவதானால் உண்மையின் தீர்ப்பு என்பது மனச்சாட்சிக் குரியது. வர்த்தையினாலும் மற்றும் கண், கை, கால் அசைவுகள் போன்ற உடல் மொழியாலும் உண்மைக்கு மாறான ஒன்றை எவராலும் கூறமுடியும். அதனைச் சரியென்று நியாயப்படுத்தவும் முடியும். ஆனால் உண்மைக்கு மாறாக பொய்ச் சாட்சி சொல்லும் ஒருவரின் மனச்சாட்சி உறுத்தும். எது சரி, எது பிழை என்பதை மனச்சாட்சி தட்டிக் கொடுக்கும். ஆனால் பலர் அந்த மனச்சாட்சியை அடகுவைத்து விட்டே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். குறிப்பாக இலங்கை அரசியலில் ஈடுபடும் பலருக்கு இந்த மனச்சாட்சி அடகுவைக் கப்பட்ட நிலையில்தான் காணப்படுகின் றது. ஈழத்தமிழ் மக்கள் நீண்டகாலமாக தமது விடுதலைக்காக போராடி வருகின் றனர். ஆனால் 1920களில் பிரித்தானி யரை வெளியேற்ற வேண்டும் என்ற போராட்டத்தில் சிங்கள மக்களோடு இணைந்து இலங்கைத் தேசியம் என்ற எல்லைக்குள் நின்று கொண்டு போராடினர்.

எனினும் 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்ன ரான சூழலில் இலங்கைத் தேசியம் என்ற அந்த ஒற்றுமைக்கு கேடு விளைவிக்கப்பட் டது. 1920 ஆம் ஆண்டு முதல் தமிழ்-சிங் கள இணமுரண்பாடு ஆரம்பித்திருந் தாலும் இலங்கையின் சுதந்திரத்தின் பின்னரான காலத்தில் இருந்து இன்று வரை தமிழர்களின் இறைமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை சார்ந்த விடுத லையில், சிங்கள அரசியல் தலைவர்கள் பலரின் மனச் சாட்சி அடகுவைக்கப்பட்டே இருக்கின்றது.

இலங்கையின் நீதித்துறையில் சுயாதீனம் இல்லை என்ற குற்றச்சாட்டு சட்டவல்லுநர்கள். அரசியல் விஞ்ஞானத் துறை பேராசிரியர்கள் பலரினால் ஏலவே சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இலங்கை நீதித் துறையின் சுயாதீனம் குறித்து அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவே நாடாளுமன்றத்தில் கேள்விக்கு உட்படுத்தியிருந்தார். இந்த நிலையில் தமிழர்களின் 70 ஆண்டுகால அரசியல் போராட்டத்தின்போது தமிழர்கள் சார்ந்த விடயத்தில் இலங்கையின் நீதித் துறை சுயாதீனமாகவும் நம்பகத் தன்மை யோடும் செயற்பட்டதா என்பது குறித்து கேள்விகள் எழுந்துள்ளன. 1948 ஆம் ஆண்டு பிரித்தானியரால் உருவாக்கப்பட்ட சோல்பரி அரசியல் யாப்பில் உள்ள 29 ஆவது பிரிவு தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்கென உருவாக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த 29 ஆவது பிரிவை அப்போதிருந்த இலங்கை அரசாங்கம் உரிய முறையில் செயற்படுத்த வில்லை. இதற்கு எதிராக கோடீஸ்வரன் என்பவர் பிரித்தானிய உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து வெற்றியும் பெற்றிருந்தார். ஆனால் அந்த நீதிமன்றத் தீர்ப்பைக் கூட இலங்கை அரசாங்கம் அன்று நடைமுறைப் படுத்தவில்லை. அத்துடன் 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியல் யாப் பில் 29 ஆவது பிரிவு அகற்றப்பட்டு விட்டது.

அதேவேளை, 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் கொண்டுவரப்பட்ட பயங் கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட் டம் எல்லாமே ஜனநாயகத்துக்கு மாறானது தான். இலங்கை அரசியல் யாப்பில் ஜனநாய கத்துக்கு மாறான சரத்துகள் இருப்பதாகஅர சியல் விஞ்ஞானத்துறைப் பேராசிரியர் கீத பொன்கலன் கூறியிருக்கின்றார். 1987ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மாகாண சபைக ளின் அதிகாரத்துக்குரிய 13 ஆவது திருத்தச் சட்டம்கூட ஒழுங்கான முறையில் இது வரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

குறிப்பாக காணி, பொலிஸ் அதி காரங்கள், முதலமைச்சருக்குரிய நிதிச் சட் டம் போன்றன நடைமுறைப்படுத்தப்படவே யில்லை. அது மாத்திரமல்ல தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கும் விடயத்தில் இலங்கை நீதித்துறை பௌத்ததேசியவாதக் கண்ணோட்டத்துடன் செயற்பட்டிருக்கின் றது. தமிழர் தாயகப் பிரதேசங்களில் கொலைகள், பாலியல்வல்லுறவுச் சம்பவங் கள் போன்றவற்றில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கபபட்டிருந்த இலங்கை இரா ணுவத்தினர் பலரை நிரபராதி என்று கூறி நீதிமன்றம் விடுதலை செய்துமுள்ளது. மேலும் பல வழக்குகள் முடிவுறுத்தப்படா மல் இழுபறிநிலையில் உள்ளன. ஆக தமிழ் மக்கள் சார்ந்த விடயங்களில் இலங்கை நீதித்துறையின் சுயாதீனம். நம்பகத் தன்மை என்பது விமர்சனத்துக் குரியதுதான்.

இந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்பட்டமை தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணை யில் நியாயமான முடிவு அறிவிக்கப்பட்டுள் ளது. இது இலங்கை நீத்துறையின் சுயா தீனத்துக்கு கிடைத்த வெற்றி எனரணில் விக்கிரமசிங்க தரப்பும், சில பொது அமைப் புகளும் மார்தட்டிக் கொண்டாடுகின்றன.

அது வரவேற்கப்படக் கூடியது தான். ஏனெனில் ஜனநாயகம், அரசியல் யாப்பு போன்றவை பாதுகாக்கப்பட வேண் டும். ஜனநாயகத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கை பிறக்க வேண்டும் என கூறப் படுவதெல்லாம் சரியானதுதான். ஆனால் இந்த ஜனநாயகம், அரசியல் யாப்பு விதி கள் எல்லாம் ஏன் வடக்கு- கிழக்கு தமி ழர் தாயகப் பகுதிகளில் மாத்திரம் ஓரவஞ்சனையாகச் செயற்படுகின்றது? 70 ஆண்டுகாலம் ஈழத்தமிழர்கள் இதே அரசியல் யாப்பால் இதே நீதி மன்றத்தினால் வஞ்சிக்கப்பட்டபோது இன்று ரணில் விக்கிரம சிங்கவுக்காக ஜனநாயகம் பேசிய தலைவர்கள் அன்று எங்கே இருந்தார்கள்? அல்லது அவர்க ளுக்கு வரலாறு தெரியாதோ? அரசும் நீதித்துறையும் ஒரு நாட்டில் வாழும் அத்தனை இனங்களுக்கும் பொதுவான தாக இருத்தல் வேண்டும். இனமத வேறு பாடுகள் நீதித்துறைக்குள் இருக்கக்கூடாது. இது ஐ.நா சாசனத்திலும் கூறப்பட்டுள்ள பிரதான விதி. ஆனால் இலங்கையில் ஈழத் தமிழர்களின் அரசியல் சார்ந்த விட யங்களில் இலங்கை நீதித்துறை பௌத்த தேசியவாத சிந்தனையோடு தீர்ப்புகளை வழங்குகின்றது. ரணில் விக்கிரமசிங்க விடயத்தில் நீதித்துறை சுயாதீனமாகச் செயற்பட்டது போன்று ஈழத்தமிழர்களின் விடுதலைப் பிரச்சினையை ஒரு சமூகத்தின் அரசியல் இருப்புக்கானது என்று கருதி தீர்ப்புகளை மனச்சாட்சியுடன் வழங்குமா? குறிப்பாக போரின்பக்கவிளை வுகளான காணி அபகரிப்பு, அரசியல்கைதி கள் விடுதலை, புத்தர் சிலை வைத்தல் போன்ற பிரச்சினைகளை உடனடியாக முடிவுக்கு கொண்டு வரக் கூடிய தீர்ப்புக் களை வழங்குமா? ஈழத் தமிழர்களின் இறைமையோடு கூடிய சுயநிர்ணய உரி மையை உறுதிப்படுத்தும் ஏற்பாடு என்பது இலங்கையின் அரசியல் யாப்புச் சட்டத் திட்டங்களுக்கு அப்பால் நின்று இரு சமூ கங்களுடைய உடன்படிக்கையின் அடிப் படையில் அமைய வேண்டும் எனக் கருதி இலங்கை நீதித்துறை விலகி நிற்குமா?

**அ.நிக்ஸன் (கொழும்பு)**

வடக்கு கிழக்கு மாகாணம் 2006 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் உயர் நீதிமன்றத் தினால் ஏன் பிரிக்கப்பட்டது? அது ஒரு சமூ கத்தின் அரசியல் இருப்பு. தமிழ் இன விடு தலையுடன் கூடிய விவகாரம். ஆகவே தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ள இரு மாகாணங்களையும் பிரிக்கவே கூடாது என நீதித்துறையால் ஏன் சிந்திக்க முடியா மல் போனது?

எனவே, ரணில் விக்கிரமசிங்க வுக்குரிய ஜனநாயகம் வென்றுவிட்டது என வும், இலங்கை நீதித்துறை சுயாதீனமானது என்றும் கொண்டாடுவோர் மேற்படி ஈழத் தமிழர்களின் நிலை குறித்தும் சிந்திக்க வேண்டும். ஆகவே தீர்ப்பு என்பது இனம், மொழி கடந்து மனச்சாட்சியோடு அமைதல் வேண்டும் என்பதை சிங்கள அரசியல் தலைமைகள் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கு வேதாகமத்தின் வார்த்தைகள் சாட்சியாக அமையட்டும்.




சிந்திக்க ஓர் சித்திரம்

## 200 ஆம் ஆண்டை நோக்கி பயணிக்கும் போர்டோவின் திருக்குடும்ப சபைச் சகோதரிகள்

திருக்குடும்ப சபை 200 ஆம் ஆண்டை நோக்கி பயணிக்கும் இவ்வேளையில் அச்சபையின் வரலாற்றுத் தடங்கள் பாதுகாவலனில் தொடராக வெளிவரவுள்ளது...

இது புதுயுகப்பிரவேசம். 2020 ஆம் ஆண்டில் தம் சபை தொடங்கிய 200 ஆண்டான, "யூபிலி ஆண்டைநோக்கி" திருக்குடும்ப சபையினர் பயணிக்கும் புனித ஆண்டுப் பிரவேசம். இந்த யூபிலி ஆண்டில் புதுத்திசைகளில் காலடி பதிக்கவும், புதிய வழிகளைத்தேடி, புது வெளிச்சங்களை நோக்கி ஒன்றாக நகரவும், உறுதிப் பாட்டுடனும் புத்தம் புதிய உத்வேகத்துடனும், மன எழுச்சிகளுடனும், நன்றி நிறை மனங்களுடனும், ஆன்மீகப் புதுப்பித்தல்களுடனும், இதய நிறைவுடனும், சபை தொடங்கிய காலந்தொடங்கி இன்றுவரை எம் வாழ்வில் அரங்கேறிய, அரங்கேறக் காத்திருக்கும் அத்தனை அசைவுகளையும் அசைபோட்டு, தம் அர்ப்பண வாழ்வின் மகிழ்வான கானங்களை ஆனந்தபைரவியிலும், சோர்வுற்ற, அஞ்சி நடுங்கி அவஸ் தைப்பட்ட அனுபவங்களை முகாரி இராகத்திலும் மீட்டிப் பார்க்க எம்மை அழைத் துக் கொண்டு ஓடிச் செல்லும் அற்புதமான யூபிலி ஆண்டுப் பிரவேசம். இப்பிர வேசம் ஏன்? எதற்கு? :-

வாழ்வு என்பது நிறைவாழ்வை நோக்கிய நீண்ட தொடர்பயணம். இப்பய ணத்தில் நாம் பலவற்றைத் தேடினோம், நாடினோம். அழ்நிலைத் தியானத்தால் கடவுளை அனுபவித்தோம். கடவுளின் மனிதர்க்ளைத் தேடிச் சென்றோம். உற வுப் பரிமாற்றங்களை உள்ளங்கனிந்த அன்புடன் மனிதநேயம் கலந்து எம் அர்ப்பண வாழ்வால் அவர்களுடன் பகிர்ந்து, நிறைவாழ்வை நோக்கி அவர்களை பரிவுடன் பலவழிகளில் வழி நடாத்தினோம். பல யதார்த்தங்களை முழுமையாகப் புரிந்து-கொள்ள முயற்சித்தோம். புதிய கருவூலங்களை வியக்கதக்க முறையில் விரிவடையும் புதிய உலக பரிணாம அறிவின் வெளிச்சத்தில் கற்றுக் கொண் டோம்.

**அருட்சகோதரி நெவிஸ் லடிஸ்லாஸ்**
**திருக்குடும்ப சபை யாழ். மாகாணம்**

(தொடரும்.....)

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## விடைபெறும் விழுமியங்கள்

அருட்பணி ஜே.திருச்செல்வம் (அமதி)

அப்பா இப்பொழுது ஏழு நாளுமே தொடர் வேலை.தன் செல்வப் புதல்வனைச் சந்திப்பதே அரிது. சிறுவன் சாள்ஸ் தன் தந்தையை ஒரு நாள் கண்டவுடன் விடுத்த வேண்டுகோள் இது. "வருகிற ஞாயிற்றுக்கிழமை வேலை தானே அப்பா"?ஆம் மகனே."ஒரு மணி நேரத்தில் எவ்வளவு சம் பாதிப்பீங்க".? "ஏன் மகனே, என்ன வேணும் சொல்." "நான் கொஞ்சம் காசு சேர்த்து வைச்சிருக்கிறன். அதை நான் உங்களுக்கு தர்றன்.. ஒரு மணி நேரம் கடற்கரைக்குப் போய் விளையாடவர்றீங்களா"? இதுவே மகனின் ஆதங்கம். இன்றைய நவீன யுகத்தில் புதிய பிரச் சினை நேரமின்மை.நண்பர்கள் கூடியிருந்து தங்கள் அனுபவங்களை, இன்ப துன்பங்களை பகிர்ந்து நிறைவு கண்ட காலம். குடும்பங்கள் இராவேளைகளில் ஒன்றாகக் கூடி செபித்து இறை விசுவாசத்தையும், குடும்ப ஒற்றுமையையும் வலுப்படுத்திய காலம். கணவன் மனைவி தங்கள் அன்றாட பிரச்சினைகளை, தேவைகளை ஒருவர் ஒருவருடன் கலந்து ஆலோசித்து தீர்வுகள் தேடிய காலம். இராவேளைகளில் பெற்றோர் பிள்ளைகளின் நலம் விசாரித்து பாடசாலைப் படிப்புக்கள், தேவைகளைக் கேட்டறிந்த நேரம். பெற்றோர் பிள்ளைகளுடன் அளவளாவிய நேரம். இவையெல்லாம் இன்று எங்கே? அவையெல்லாம் மலையேறி விட்டனவா? அல்லது விடைபெறும் விழுமியங்களாக மாறிவிட்டனவா? இன்று காணப்படுவது கணனிமயப் படுத்தப்பட்ட யுகம். சமூக ஊடகங்களில் அதீத ஈடுபாடு.

படிப்புக்கள்,
பட்டங்களை,
தொழில் துறைகளை, பணம் சம்பாதிப்பதை தெய்வங்களாக்கி, ஆன்மிகத்தை மட்டுமல்ல, ஆன்மாவையுமே இழக்கும் அபாயம். ஆற்று வெள்ளத்தின் வேகத்தில் அடித்துச் செல்லப்படுகிறது ஓடம். எதிர் நீச்சல் போட அதற்கு திராணியில்லை. புயல் காற்றில் அடித்துச் செல்லப்படுகிறது மரக்கிளைகள். தம் நிலையைத் தக்க வைக்க அவைக்கு எதிர்ப்புச் சக்தியில்லை. இன்றைய மனிதனுக்கும் அதே நிலை தான். நவீன மாற்றங்களின் விசையினால் பலர் இழுத்துச் செல்லப்படுகின்றனர்.வாழ்வை மேம்படுத்துவது எவை? சீரழிப்பவை எவை? எனத் திறனாய்வு செய்யாமல் புதிய கண்டுபிடிப்புக்களின் மாயைக்குள் மூழ்கிவிடுகின்றனர் பலர். வாழ்வை வளப்படுத்தும் மரபுகள், விழுமியங்ளை புறந்தள்ளி அடுத்திருப்பவரோடு, இயற்கையோடு உறவின்றி, கருவிகளோடு சங்கமமாகும் புதிய யுகம் இது. குழந்தைகள், சிறுவர்கள், இளம் சந்ததியினரின் ஆளுமை, விழுமியங்கள் மேலும் அவர்களின் ஆன்மிக வளர்ச்சி மலினப் படுத்தப்படுதல், பெற்றோரின் தகுந்த கண்காணிப்பு, வழிநடத்துதல் இன்மையால் பிள்ளைகள் தீய சக்திகளின் ஆக்கிரமிப்புக்கு அடிமையாதல் இன்னும் பல. இவை யாவும் அவர்களின் வருங்காலத்தை மலினப்படுத்துமன்றோ?

பழைய ஏற்பாட்டில் சபை உரையாளர் இவ்வாறு கூறுகிறார் "ஒவ்வொன்றுக்கும் ஒரு நேரமுண்டு. உலகில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒரு காலமுண்டு." (ச.உ.3.1)மேலும் கூறப் படுவது, "ஒவ்வொரு செயலுக்கும் காலமுண்டு, செய்யவேண்டிய முறையுமுண்டு" (ச.உ.8.6) ஆகவே நேரத்தையும், காலத்தையும் அறிந்து செய்யவேண்டியதைச் செயற்படுத்தாமலிருப்பது கடமையில் தவறுவதாகும்.

குடும்பங்கள் விடுதியாக மாறும். படங்கள், சுரூபங்கள் வெறும் காட்சிப் பொருட்களாக மாறும். விளக்கேற்றி குடும்பமாக வழிபாடும் காலம் மங்கி மறையும். இல்லங்கள் மகிழ்ச்சியாக வாழும் இடமல்ல, மாறாக படிக்கவும், பொழுது போக்கவும் தங்குமிடமாக அமையும். குடும்ப ஆசீர்வாதங்களை, ஒற்றுமை, சமாதானத்தை இழக்க நேரிடும். அப்படியானால் இத்தீமைகளை முன்னுணர்ந்து மாற்றி அமைக்க முடியாதா? சிந்தனை தெளிவானால் செயல்களும் தோன்றும். குடும்பக் கட்டுக்கோப்பை, சமூக வாழ்வியலை பேணிக்காக்கும் புதிய மாற்றங்களைப் புகுத்தும் சிந்தனைச் சிற்பிகளாகச் செயற்படுவது காலம் விடுக்கும் சவாலாகும்.

**"மாற்றமடைந்து கொண்டிருப்பது வாழ்க்கைத் தத்துவம். தீர்க்கமான மாற்றங்களே, நிறை வாழ்வின் தாரக மந்திரம்."**

– அருளாளர் கர்தினால் நியூமன்.

## நற்செய்தி கேட்குமா?



தமிழ் மக்களின் வாழ்வில் போரின் வடுக்கள் இன்றும் ஆறாப் புண்களாக புதைந்து கிடக்கின்றது. சாதாரண ஒரு வாழ்வை எமது மக்கள் வாழ்கின்ற போதிலும் அவர்களிடமிருந்து மாற்றமுடியாத பாரிய வேத னையூடாக எம் மக்களின் வாழ்வு நகர்ந்து செல்கின்றது. எமது கிறிஸ்தவ வாழ்வைப்பொறுத்த வரையில் நாம் ஒரு காத்திரமான வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறோமென்றால், அந்த வாழ்வு எமது விசுவாசத்தின் ஆழத்திலிருந்து நாம் பெற்றுக்கொண்ட அருட்கொடைகளாகும். இந்தமண்ணில் மறைசாட்சிகளாக நாம் விளங்கியிருக்கின்றோம் என்பதுவே உண்மையாகும் அண்மையில் கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை அவர்கள் "தமிழ் மக்களுக்கு சுயாட்சி வழங்கப்படவேண்டும்" எனக் கூறியமை எமக்கு மகிழ்வைத் தருகிறது. இப்புத்தாண்டில் எமக்கு ஒரு நீதியுடன் கூடிய அமைதித் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதையே நாம் எதிர்பார்த்து குழந்தை இயேசுவிடம் பிரார்த்திப்போம். "அஞ்சாதீர்கள்! இதோ! எல்லா மக்களுக்கும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன்" என அன்று வானதூதர்கள் இடையர்களுக்கு அறிவித்தது போன்ற ஓர் நற்செய்தி எங்கள் காதுகளில் இனியாவது கேட்கவேண்டும். கேட்குமா...?"

யோ. யோய் பேர்சி
சுன்னாகம் பங்கு

## இதுதான் கிறிஸ்மஸ்

பயணம் செய்யும் இளவரசன் தன் தந்தை மன்னனிடம் வழிப்பயணத்திற்கு, எதை நான் கொண்டு செல்ல வேண்டும் எனக் கேட்டான்.

- **வெறுக்காத இதயம்**
- **வாடாத புன்னகை**
- **புண்படுத்தாத வார்த்தைகள்**
- **பகிர்ந்து வாழ்தல்**

எடுத்துச் செல்லும்படி பதில் வந்தது. இதுவே கிறிஸ்மஸ்; புத்தாண்டில் நாம் புதுப்பிக்க வேண்டியவையும் இவை தான்.

எஸ்.ஏ.றொக்ஷன்
புனித பத்திரிசியார் கல்லூரி

## இளையோர் காவியம்... 18

நான் எந்த வீட்டை நினைத்து
கண்களை மூடுகின்றபோது
அங்கே நடக்கிற சம்பவங்கள்
மனிதர்களின் நடமாட்டம்
தெரியும்
உன்
சோதனை யன்னல் வழியே
மரணம் எட்டிப் பார்க்கிற போது கூட

நீ கடவுளை விட்டு விலகாமல்
இருக்கும்போது கிடைப்பது தான்
ஞானம்

துறவி
குருக்கள் ஊடாக மட்டுமல்ல
நீ கடவுளை அடைகிற வழி

மனம் எவ்வளவு தூய்மையோ
கடவுளுடன் நெருக்கமாகிறாய் நீ

புனிதராக
ஞானியாக வரவிரும்பினால்
ஆன்மீக கடலின் ஆழத்தில் இறங்கு

நீ கடவுளைத் தேடுகிற பாதையைக்
காட்டலாம்
கடவுளை காணுவது உன்னுடைய
முயற்சி

பிறர் வாழ்வில் இருந்தல்ல
தன்னுடைய வாழ்வில் இருந்து
விலகிறவன் தான் துறவி

நீ கடவுளை மட்டுமல்ல
மனிதர்களையும் தேடுவதுதான்
ஆன்மீகம்

வாழ்வில் ஒழுக்கம் இல்லாமல்
நடந்து ஆன்மீகப் பணியில்
ஈடுபடுதல் பகல் வேசம்

நீ முதலில் துப்பரவு செய்
கடவுள் உனக்குள் இருக்கவேண்டிய
இடத்தை

எழு என்றால் எழும்
அடங்கென்றால் அடங்கும் புயல்
நீ கடவுளை மட்டும் நம்பு

ஆயுத பலத்தோடு அல்ல
ஆன்மீக பலத்தோடு
நிற்கிறவன்தான்
வல்லரசு (தொடரும்...)

- உயிரோவியன்

## தரணி தரும் தாழ்மையும் எளிமையும்



அருட்கலாநிதி வின்சன் பற்றிக் (அமதி)

"தூய மனிதர்கள் தரணி தரும் அனைத்தையும் தமக்கென்றே எடுத்துக் கொள்கிறார்கள். அதே வேளை புவி தாயாகின்றாள். இயல்பாகவே எல்லாவற்றினதும் தாய் அவளே. மனிதர் எல்லோரி னதும் தாய் அவளே. அனைத் து விதைகளையும் தாங்கிய எல்லாவற்றினதும் எல்லோரினதும் தாய் அவளே" என்கிறார் பின்ஞன் கில்டேகிறாட்.

"சகோதரி புவி மூலமாக எல்லாப் புகழும் உமக்கே என் ஆண்டவரே! அவரே என் தாயார்.அவர் தமது ஆட்சியில் எமக்கு உணவூட்டுகிறார். பல விதமான பழங்களையும் நிற மூட்டப்பட்ட பூக்களையும், மூலிகைகளையும் அவர் விளைவிக்கிறார்" என்று அசிசி நகர் புனித பிரான்சிஸ் பிரபஞ்ச உறவை வலுப்படுத்துகிறார்.

"எமது உணர்வு இயற்கையில் புதைக்கப்பட்டுள்ளது. எமது பரிவில், எமது அருளில், எமது உணர்வில் இறைவனே உள்ளார். எமது உட்பொருளை, எமது உணர்வை ஒரு போதும் பிரிக்காது இணைத்து வைப்பவர் இறைவனே!" என்று நோர் விக்கின் யூலியன்

பிரபஞ்ச உணர்

வலைகளில் எம்மை மிதக்க வைக்கிறார். "பிரபஞ்சம் மக்களுக்கு உரியது அல்ல. மக்களே பிரபஞ் சத்திற்கு உரியவர்கள். படைத்த பரம்பொருளிற்குப் பிரபஞ்சம் பெறுமதி வாய்ந்தது. பிரபஞ்சத் தைக் காயப்படுத்துவது படைத்தவரை நொந்து கொள்வதாகும்" என்று சீவ் சீற்றில் எமது சிந்தனைகளைச் சீராக்குகின்றார். அடிமைப்படுத்தல், அழவைத்தல், இம்சித்தல், இழிவு படுத்தல், முரட்டுத்தனம், பழிவாங்கும்தன்மை போன்றவற்றிற்கு எதிரானதே தாழ்மையாகும். மனம் ஒரு பளிங்கு மாளிகையாகத் துலங்கும் பொழுது தாழ்மை மேலோங்கிக் காணப்படும்.

"வாழ்வு தெளிவானதும் கலங்கலானதுமான ஊற்றுக்களிலிருந்தே அரும்புகின்றது. அதிகப்படியான நுண் தூய்மை தேடல் வாழ்வியல் சாரத்தை தேய்விற்கு உள்ளாக்குகின்றது. வாழ்வின் ஒவ்வொரு புதுப் பித்தலிற்கும் தெளிவான தன்மையும் கலங்கலான தன்மையும் தேவைப்படுகின்றது என்பது எகாட்டின் கருத்தாகும்.

"இறைவனை மதிப்பதற்கும் இறை புகழ் பாடுவதற்கும் மனிதம் தேவைப்படுகின்றது. எல்லா சந்தர்ப்பங்களிலும் இந்த உடல் புவியினால் ஆதாரப்படுத்தப்படுகின்றது. இவ்வாறு புவி கடவுளின் வல்லமையை மகிமைப்படுத்து கின்றது" என்கிறார் கில்டேகாட்.

ஓர் ஆசிரியை அதிபரது அறைக்குக் கோபத்துடன் வந்து, "இம்முறையும் எனக்கு முதலாம் ஆண்டைத் தந்துவிட்டீர்களே. அந்தப் பிள்ளைகள் சரியான கரைச்சல். எந்த நேரமும் என்ர சீலையைப் பிடித்தபடி." அதிபர் சிரித்தபடி, "தெரியும். உங்களை அந்தப் பிள்ளையள் தங்கட அம்மாவைப் போல பார்க்கினம். அதுதான் உங்கட சீலையைப் பிடிக்கினம். தெரிஞ்சுதான் போட்டனான். உங்களைப்போல யாரும் அவ்விதம் செய்ய முடியாது." ஆசிரியை அமைதியாகத் தனது வகுப்பறைக்குச் சென்றார்.

குழந்தையுள்ளம் கொண்டோ ராய் நாம் வாழ முற்படும்பொழுது எம்மில் எளிமை, பொறுமை, கனிவு, இனிமை போன்ற நற் பண்புகள் இயல்பாக எழும். அகங்காரம், ஆணவம், அகந்தை, பெருமை, பொறாமை போன்ற குறைபாடுகள் இல்லாமற் போகும்.

*மண்ணும் விண்ணும் சேர, மனித மும் புனிதமும் இணைய மனிதரிலே இயேசுவைக் காண்பது சாத்தியமாகிறது.*

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்




## ஆதரிக்க வாரும் பாலகனே

அன்பான பாலகனே
ஆண்டவராய் அவதரித்தீர்
இரக்கமுடன் அடைந்திட
உம் வரவை புவியில்
ஊன்று கோலாக்கினீர்
எம் பாவச்சுமைகளை
ஏற்பதற்காய் ஏழையானீர்
ஐயம் நீக்கி நாம் என்றும்
ஒற்றுமையாய் இணைந்து
ஓர் மறையாய் வாழ்ந்திட
ஔடதமாய் எம்மை
ஆதரிக்க வாரும்
அமைதியின் பாலகனே...

சேரதுபன் ஷெல்வின்
மல்வம்

## நிகரிலா எம் இறை அரசர்

கார்த்திகை மறைந்தது
கனமழை ஓய்ந்தது
கருணை வடிவிலே
கனியொன்று பிறந்தது
மார்கழி குளிரினில்
மாட்டிடை தொழுவமும்
மேரியின் மைந்தனின்
மலர்வினில் மகிழ்ந்தது
பார்தனில் கல்லொளி
போலிறை பாலகன்
போற்றினால் பூ மழை
புலமெங்கும் பொழிந்தன
நீர்ச்சாடி இரசமுமாய்
நிறைந்திட்ட புதுமையின்
நிகரிலா அரசரை
நாம் கரம் கூப்புவோம்
கலைமாமணி
கே.ஆர்.திருத்துவராஜா



## மனிதத்தைத் தேடி

மாடடைக் குடிலோ
மாளிகையாச்சு
மரியன்னை மடியில்
மாபரன் இயேசு
மனிதத்தைத் தேடி
பாரினில் பிறந்தார்
யோ.கலிஸ்ரா
சுன்னாகம் பங்கு

## குழந்தை இயேசுவே உம் வருகைக்காய் காத்திருக்கின்றேன்

அச்சங்கள் சூழ்ந்து அகந்தைகள் மலிந்து விட்டன
விலைமதிப்பில்லா உயிர்கள் விலைக்கு வாங்கப்படுகின்றன
மனித நேயங்கள் அழிக்கப்பட்டு மிதிபடுகின்றன
கொள்ளைகளும் கற்பழிப்புக்களும் பெருகி விட்டன
சந்திக்குச் சந்தி வாள்வெட்டுக் கலாசாரம் தலைவிரித்தாடுகின்றன
வீதிகள் எங்கும் விபத்துக்கள் அராஜகமாக நடக்கின்றன
வைத்தியசாலைகளில் நோயாளிகள் மலிந்து கிடக்கின்றனர்
எங்கு பார்த்தாலும் மரண ஓலங்களாய் இருக்கின்றன
மிளகாய்த் தூள் கரைசலால் தவறுகள் நடக்கின்றன
துப்பாக்கி முனை காட்டி பயமுறுத்திய காலம் மௌனிக்கப்பட்டன
கூரிய ஆயுதங்கள் காட்டி கொள்ளைகள் அரங்கேறுகின்றன
விடிவில்லா வாழ்வு நாளும் தொடர்கின்றன
நம்பிக்கைகள் அனைத்தும் அவநம்பிக்கைகளாக்கப்பட்டன
எதிர்பார்ப்புக்கள் அனைத்தும் கானல் நீராய் மாறுகின்றன
எம் வளங்கள் அனைத்தும் சூறையாடப்படுகின்றன
இன்பங்கள் துன்ப துயரங்கள் ஆகின்றன
சாதனைகள் சோதனைகளாகின்றன
அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றன
இளைஞர்கள் தடம் மாறுகின்றனர்
பல அநீதிகள் தலைவிரித்து ஆடுகின்றன
தொடர்நாடகங்கள் பெண்களை சீரழிக்கின்றன
போதைப்பொருள் பாவனைகள் மலிந்து விட்டன
அரசியலில் தளம்பல் நிலை காணப்படுகின்றன
நாளும் பொருட்களின் விலை அதிகரிக்கின்றன
மக்களாகிய எம் மீது வரிகள் அதிகம் விரிக்கப்படுகின்றன
மக்கள் சொல்ல முடியாத பல துயரங்களை சந்திக்கின்றனர்
மாமரி வயிற்றில் மாடடை குடிலில் மனுவானவரே
சீரழியும் எம் வாழ்வுதனை வளமாக்கிட
புதியதோர் விடியலாய் வாருமே பாலகனே!
மனுக்குலத்தின் மீட்பனாய் தரணி வந்து
தடம் மாறும் எம் வாழ்வுதனை மாற்றிட
மீண்டும் உம் வருகையால் எம்மை மீட்டருளும்
மறுமலர்ச்சியுடன் எம் வாழ்வை அமைத்திட
பாலகன் இயேசுவே வந்தருளும்
வறுமை எம்மை வாட்டுகின்றது
ஆணவம் தாண்டவம் ஆடுகின்றது
பொறாமை அதிகரித்து விட்டது
இவை யாவும் நீங்கி வாழ
இயேசுவே உம் வருகைக்காய் காத்திருக்கிறேன்
**கட்டைக்கவிஞன்**
**த.பிரதீபன்**



## மனிதத்துக்காக மீண்டும் மனிதனாக.....

வருடத்தாயின் கடைசிப்பிள்ளையின்
முத்தான கனியே - உனை
முத்துக்களால் மாலைதொடுத்து
மலர் வணங்க
பாவப்பட்ட இந்த கவிஞன் நான்
வடிக்கின்றேன் என் ஆசையை
உன் காலடியில்

மன்னனாக நீ வந்திருந்தால்
மறந்தும் கூட போய் இருப்பாய்
மனிதனாக நீ வந்ததால் என்னவோ
இன்றும் மன்னனாக வாழ்கின்றாய்



காலங்களைக் கடந்த நீ - இந்த
காலத்திற்கு உட்பட்டது
கடையவர் எம்மை மீட்க
அல்லாமல் வேறு எதற்காக?

எப்படியும் வாழலாம் என்று உலகில்
இப்படித்தான் வாழவேண்டும் என்று
வழியைக்கூட சொல்லாமல் - அதை
வாழ்ந்தும் காட்டினாய் மனிதனாய்

அழுது கொண்டிருக்கும் உனக்கு
ஆறுதலுக்குக்கூட ஒருவரும் இல்லையா?
அவலங்கள் நிறைந்த உலகை எண்ணி
அடிவயிறு நோக அழுகிறாயோ?

மனிதம் என்பதற்கு அர்த்தம்
மண்ணில் இல்லை என்றெண்ணி...
விண் விட்டு மண் வந்தாய்
மண்ணில் மனிதம் அர்த்தம் பெறுவதற்கு

ஈற்றில் உன்னிடம் என் வேண்டுகை
மனிதம் அற்றுப் போகும் இவ்வுலகில்
மனிதத்தின் அர்த்தத்தைக் காண
மீண்டும் கேட்கிறேன்
மனிதனாக உதிப்பாயா?
**மெ.மெக்டலொஸ் பேர்டினன்ற்**
**புனித வளனார் அ.ம.தி. குருமடம்**
**யாழ்ப்பாணம்**

## ஈசாயின் இளம் தளிரே இளையவர் மனங்கவர்ந்திட எழுந்திடாய்?

ஆதியில் இருந்த வாக்கு ஆண்டவன் திட்டமதில்
ஜோதியாய் ஒளிர்ந்தது பெத்லகேம் நகரினில்
மேதினியில் மனுக்குலம் மீட்பினில் திகழ்ந்திடவே
நீதியின் தளிராய் அன்னை மரிமடியில் தவழ்ந்தீரோ?

வானவர் மகிமையின் கானம் பாடிடவே
கானவர் மகிழ்வின் நற்செய்தி பரப்பிடவே
ஞானம் நிறை அரசரும் அடிபணிந்து வணங்கிடவே
தானம் நிறை தனயனாய் தரணியில் உதித்தீரோ?

ஆண்டுதோறும் புலரும் பாலகன் பிறப்பில் மகிழ
பூண்டிடுவார் ஆடம்பரங்கள் ஆனந்தத்தில் திகழ
மாண்டிடும் மக்கள் அவலம் மனதினில் எண்ணிடாது
தாண்டியே சென்றிடும் ஆணவத்தை அமலனே நோக்கிடாயோ?

இணையத்தில் மூழ்கி ஏதிலார் நிலை உணரா இளையோரே!
இணைந்திடுவீர் இறைதிட்டப் பயணமதை இலக்காக்கி
இதயமதைப் பாழ்படுத்தும் மது. மாது பேராசையகற்றி
உதயம் காண விரைந்திடுவீர் பாலகன் குடில் நோக்கி

கைவிரலின் சுழற்சியில் உலகமதை உள்ளடக்கும்
தைரியச் செயலே வாழ்வென்ற தப்பறையில் முடங்கி
கைநெகிழும் பொன்னான வாழ்வு மண்ணாகி அடங்குதே
வையகம் காக்கும் வியத்தகு ஆலோசகனாய் விரைந்திடாயோ?

இளமையின் மோகம் "எவ் சற்றின்" வேகமதால்
முழமது நான்கினுள் ஒடுங்குதே இளைய நல்வாழ்வு
வளம்மிகு வாழ்திறனும் "முகநூல்" தொடர்பில் சீரழியுதே
தளர்வுறும் மாண்புகளை திடனாக்கும் தளமாய் வாராயோ?

போதைவஸ்துப் பாவனையும் வாள்வீச்சும் சமூகப் போராவதால்
பாதை தவறிப் பரிதவிக்கும் இளம்தலைமுறையோ தாராளம்
வாதைகளில் துடிக்கும் குடும்பங்களின் குறைகளோ ஏராளம்
வேதமதை வாழ்விக்கும் விண்மீனாய் ஒளிர்ந்திடாயோ?

இளந்தளிராய் துளிர்த்த இறைவாக்கின் உண்மையே
இளையவர் உள்ளமதில் நல்நோக்கின் விதை ஊன்றியே
களையாய் வளரும் அநீதிகள் களைந்தே - நல்
முளையாய் வளர்ந்திடும் விளைநிலமாய் மாற்றிட மாபரனே
இளையவர் இதயமதில் நீ இளம் தளிராய் எழுந்திடாயோ?

S.M.லோறன்ஸ்
(இளவாலை)



## மீண்டும் வாராய் தெய்வமே



விடியலைத் தேடும் எமக்கு
விடுதலை வேண்டும் தெய்வமே!
வீண்போகும் எம் ஒவ்வொரு
விடியலும் அர்த்தமற்றதாய்
மாறுகின்றன தெய்வமே!

வாழ்க்கைப் பயணத்தின் பாதைகள்
வைரமான கல்லாலும் முள்ளாலும்
நிறைகின்றன தெய்வமே!
வலிந்து பாவம் கூட வலி தந்து
வா... வா... என்று அழைக்கின்றது தெய்வமே!

வரமொன்று கேட்கின்றேன்
வாழ்நாள் எல்லாம் உன் கரமொன்று
வேண்டும் தெய்வமே!
வழிநடத்தும் உம் புது வரவில்
வசந்த வாசம் எம் வாழ்வில் வீசட்டும் தெய்வமே!

வந்தாய் தெய்வமே! நீ மீண்டும் வாராய்
வரும் துயர் போக்க வாராய் தெய்வமே!
வலிகள் நிறைந்த மனங்களோடு
- காத்திருக்கின்றோம்
வானில் நீ மாட்சியோடு வருவாய் தெய்வமே!
**ஏ.ஜெயக்குமார்**
**புனித வளனார் அ.ம.தி. குருமடம்**

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## எமக்காக பிறந்தவர் எம்மில் பிறப்பாரா?

வானத்து எல்லையெங்கும்
வண்ணப் பூச்சொரியும்
கார்கால நடு நிசியில்
களிப்பான மார்கழியில்
ஞாலத்து இருள் அகற்ற
விண்ணரசின் மாமன்னர்
காலத்தின் தேவைக்காய் - கன்னிமரி
உதரத்தில் மனுவாக அவதரித்தார்

ஒளியாக வந்துதித்த
உத்தமனாம் இறைமைந்தன்
வழியாக வந்துதித்து
எம் வாழ்வில் பிறப்பாரா?
துளிகூட அமைதியின்றி
துன்புறுமெம் சோதரரின்
துயர்துடைக்க தூயவராம் - பாலன்
மனத் துணிவைத் தருவாரா?

ஆயுதமே வேதமென்றும்
அடக்குமுறை கொள்கையென்றும்
அதிகாரவெறி கொண்டோர்
ஆட்சிமுறை மாறிடவும்
ஆணவத்தின் பிடியினிலே
அல்லலுறும் இப்பூமி
அமைதியிலே நிலைத்திருக்க - யேசு
எம்மில் வந்து பிறப்பாரா?

மனிதத்தை தொலைத்து விட்ட
மகத்தான பூமியிலே
தனிமனித நேயத்தை
தரணியெங்கும் விதைப்பாரா?
வன்முறைகள் சூழ்ந்த - இந்த
வக்கிர பூமியிலே
துன்பநிலை மாற்றி - அன்பு
பூ மலர வைப்பாரா?

கண்டதே காட்சியென்ற
கசப்பான நிலை மாறி
கொண்டதே வாழ்க்கையென்ற
குடும்பத்தை அமைப்பாரா?
உதயத்து விடிவெள்ளி
உலகுக்கு ஒளியூட்டி
இதயத்தை புதுப்பிக்க - யேசுபாலன்
எம்மில் வந்து பிறப்பாரா?

**யே.பமினா கிறிஸ்ரின்**
**புதுக்குடியிருப்பு**

## இரட்சகர் உதித்துள்ளார்



மாடடைக் குடிலில்
மாமரியின் மடியில்
முழுமதியாய் சுடர் விட்டார்
எம் மழலை இரட்சகர்

சிலுவையைத் தன் உறவாக்கி
சிலுவை ஆணியைத்
தன் நண்பனாக்கி
நம் சிரம் நிமிர
தன் சிரம் தாழ்த்தி முள்முடி அணிந்த
இரட்சகர் உதித்தார் எம் அவனியிலே

விண்ணவர் போற்ற
மண்ணவர்கள் வாழ்த்த
மண்ணின் மைந்தனாய்
மாமரியின் புதல்வனாய் வந்தாரே
எம் இரட்சகர்

**எஸ்.மேரி டெலோஸ்**
**புனித மரியாள் அலயம்**
**ஊர்காவற்றுறை.**

## குழந்தையே நில்லும்! சொல்லும்!!



எளிமையாய்த் தோன்றி மனிதம் வாழ
உண்மை வழிமுறை மொழிந்து
மனிதப் பழியினை நீக்க
அழிந்தும் அழியாதெழுந்த
செழுமையே எம்விழியே!

அன்பையே ஆயுதமாய்க்கொண்டு
நீதியும் நேர்மையும் சாந்தியும் சமாதானமும்
சமத்துவமும் போதித்து ஞான முதிர்த்தாய்
அறச்செயலே அறிவென்று
அறிந்தன்றே கூறிவிட்டாய்
மறம் உண்ட மனிதரிற்கு
மண்டைக்குள் ஏறவில்லை

ஈய்ந்தான் மேலவன் பகுத்தறிவை சாயலிற்கு
இவன் கொண்டான் ஆராய்ச்சி
இறைவனையும் உட்படுத்தி
விளைவு கண்டுபிடிப்புகளாம்

காக்க வேண்டுமாமே நாட்டை
கண்டு கொண்டான் ஆயுதத்தை
துளியில் உருவான உயிரை
நொடியில் அழித்திட்டான் போரிட்டு
இறைவன் அளித்த இயற்கை முகிலை கலைத்து
இவன் பெய்வித்தான் விஞ்ஞான மழை
இயற்கை தந்த நெல்லை நீக்கி
இவன் தான் கண்டான் இறப்பர் அரிசி
கருவில் உருவாகும் உயிரை
கண்ணாடிக் குழலில் உருவாக்கினான்
அருகில் மரணம் உண்டென்பதை
மனிதன் மறந்தே போய்விட்டான்



சமத்துவம் என்ற சொல்லிற்கே இடமின்றி
இனங்களாய்ப் பிரிந்து கொண்டான்
உயரினம் தாழினத்தை அழிக்க வேண்டுமென்று
சட்டமதும் வகுத்துக் கொண்டான்
காடாளும் விலங்குகளில் கீழானான்
நாடாளும் மன்னன்
மாடுகளாய் இருந்த போதும் தோல்புகுத்திய
சிங்கங்களாய்க் காட்டிக் கொண்டான்

ஜப்பானில் சட்டமாம் மனிதனை மனிதனே
உண்ண ஆமென்று
முடியுமா இனி இருக்க மனிதமும் நேயமும்
முடித்து வைக்க நீயிங்கு எப்போது?

**த.அஜ்றாட் ஜக்சன்**
**வாழ்வகம்**
**விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்**

## சரித்திரம் புதிதாய் வரைந்திடுவோம்!

விண்ணுக்கும் மண்ணுக்கும் பாலமமைக்க
விண்ணவர் மண்ணிலே பிறந்திட்டார்
மண்ணகத்தோரின் பாவங்கள் கழுவிட
மனுமகனாய்த் தேவன் மலர்ந்திட்டார்!

ஏழ்மையைத் தாழ்மையை ஏந்தியேவந்து
ஏற்றங்கள் எம்மில் வரைந்திட்டார்
வீழ்ச்சியில் எழுச்சியை எழுதிடவென்று
விடியலாய்க் குடிலிலே உதித்திட்டார்!

மாமரி சூசையின் மடிதனில் தவழ்ந்து
மாபரன் இயேசு மகிழ்ந்திட்டார்
சாபங்கள் போக்கிடும் சத்தியனவரே
சரித்திரம் புதிதாய் புனைந்திட்டார்!

தனக்கென ஓரிடம் இன்றிக்குடிலில்
தளைத்து அருளதாய் எழுந்திட்டார்
கனக்கும் பாவத்தைக் கழுவிடச்சத்தியன்
கடுங்குளிர் காலத்தில் கவின்றிட்டார்!

ஒளியதன் பொருளாய் உத்தமன் மலர்ந்து
ஒற்றுமைச் செய்தியை வழங்கிட்டார்
வழியினைச் செம்மைப் படுத்திடவென்று
வழியதாய்த் தன்னையே தந்திட்டார்!

நித்திய நேசரை நெஞ்சிலே நிறுத்தி
நித்தமும் அவர் வழி சென்றிடுவோம்
சத்தியன் காட்டிய ஒளியது ஏந்தி
சரித்திரம் புதிதாய் வரைந்திடுவோம்.

**கவிஞர் சூரியநிலா (உசன்)**

## மனங்களில் மலர்ந்திடு மாபரனே

மண்ணில் மனிதனாய் மனுமகனாய் வந்தாயே
மனிதத்தின் புனிதத்தை மன்னோர்க்குத் தந்தாயே
மரியின் மகனாக மீட்பராய் பிறந்தாயே
மக்களின் இரட்சகராய் இயேசுவே மலர்ந்தாயே

வாட்டிடும் துன்பங்கள் வாடியே நிற்கின்றோம்
வாழ்த்திடும் வழிகளில் தனிமையில் துவள்கிறோம்
வாழ்வளிக்க யாருமில்லை ஆதரிக்க எவருமில்லை
வானுலகின் வேந்தனே எமக்குள்ளே மலர்வாயே

உறவுகள் தூரமாய் உதவாமல் போகையில்
உண்மை அன்பின்றி வேஷங்கள் போடுகையில்
உன்னத உம் அன்பு எமக்கிங்கு அருள்வாயே
உத்தமரே இயேசுவே உன்னருள் தருவாயே

**சில்லையூர் றமணி**

## மார்கழியில் பூத்த மன்னவரே வருக....

மானிடம் தளைக்க
மனிதனாய்ப் பிறந்தவரே வருக
பாவ இருள் அகற்ற
சூரியனாய் உதித்தவரே வருக
தீமைகள் ஒழிக்க
ஒளியாய் வந்தவரே வருக
மன்னிப்பை உலகிற்கு
அழித்தவரே வருக
பூமியைக் காக்க
உயிரானவரே வருக
மானிட விடிவிற்காய்
வித்தானவரே வருக
வருக ... வருக... யேசு பாலனே
எம்மை ஆள வருக...

**கெவின் வற்சன்**
**மல்வம்**



## பிறந்து விட்டார்

அன்பெனும் உணர்விலே
அகிலத்தை அரவணைக்க
பிறந்திட்டார் - எம் சின்னப்பாலகன்
இயேசு மீட்டும்
ஒரு முறை எமக்காய்
மனித வடிவில் - எம்
இறைமகன் இயேசு பிறந்திட்டார்
- எம் மீட்பர்
பகைமை வேற்றுமைகளை - மறக்க
பிறந்திட்டார் எம் பாலகன் - இந்த
பார் ஒற்றுமை அன்பில் தழைத்தோங்க
பிறந்திட்டார் - மாட்டுக் கொட்டினிலே
கோபம் பொறாமைகளின் வேர்களை
அறுக்க பிறந்திட்டார் - எம் பாலகன்
தாழ்மையின் வடிவிலே
விண்மீனைப் போல்
துன்பங்கள் தாங்கிட துயரங்கள் நீங்கிட
தூதுவன் பிறந்திட்டான்
எம் அன்னை மடியிலே
மனிதத்தின் உள்ளத்தில்
அமைதி வரவேண்டும் - உன் பிறப்பால்
நீ பிறக்க வேண்டும்
நீ என்னில் பிறக்க வேண்டும்.

**அருட்சகோதரன் டொ.பியோ றஞ்ஜித் OSB**
**புனித ஆசீர்வாதப்பர் சபை**

## வருமா...? நாளை நல்ல செய்தி....



பெத்லகேம் பெருமைப்பட
அனுப்பினார் இறைவன்
இடையர்களுக்கும் ஞானிகளுக்கும்
விண்ணரசு என்றென்றும்
உங்கள் பக்கம் என்று

அதிசயமும் அற்புதமும் தரிசனமும்
தந்தது வால்வெள்ளி... தள்ளி
மறைவாய் நின்றது
வெள்ளி வாளுக்கு பயந்தல்ல -
எனதாட்சி என்றென்றும்
நல்லவருக்கே உரியதென்று

துள்ளிய ஏரோது மன்னன் துடித்தான்
ஒரு நொடியில் சுருண்டு போனான்
மழலையால் மடிவேன் என்று...
எடுத்தெறியும் ஏரோது மன்னர்கள்
போன்றோர் எம்மத்தியிலும் ...
ஆட்சியாளராக அதிகாரம் படைத்தவர்களாக
ஆன்மீகவாதிகளாக
அரசியல்வாதிகளாக
வலம் வரும் பல்லக்கிலிருந்து
மடியும் நாளைக்
கணக்குப்பார்க்கும் முன்
மமதையைவிட்டு இறங்கி
வருவார்களா...?
பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்பார்க்கும்
மனம் நோகாத நல்லவாழ்வு
சுபீட்சமான நல்லாட்சி
சுரண்டாத சுகவாழ்வு கொண்டு
பாலனுக்கு காணிக்கையாக
ஏழைகளுக்கு ஒளியாக
வருவார்களா..?
நாளைவரும் நத்தாரில்
நல்ல செய்தி கொண்டு....

**S.B.பீற்றர் போல்**
**யாழ்ப்பாணம்.**

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## 2019 எதிர்கொள்வோம்

அருட்சகோதரி ரோமலா அன்ரனி (HC)

**2018**ம் ஆண்டு எம்மிடமிருந்து விடைபெறுகின்றது. 2019ம் ஆண்டு என்னும் புதியதொரு அகவை தொடங்க ஆவலுடன் காத்திருக்கின்றோம். "தை பிறந்தாலே வழி பிறக்கும்" என்பது முதுமொழி பிறக்கப் போகும் புதிய ஆண்டை வரவேற்பதற்கு நாம் தயாராகுவோம்.

இப்புதிய ஆண்டு பல புதிய வழிகளையும், மாற்றங்களையும், முன்னேற்றங்களையும், முயற்சிகளையும் மகிழ்ச்சியான விடயங்களையும், வெற்றிகளையும், உயர்வு நிலைகளையும் தருவதாக அமை யலாம். சில சந்தர்ப்பங் களில் சவால் நிறைந்ததாகவும், எதிர்ப்புக்களை சந்திக்க வேண்டியதாகவும், போராடி வெல்ல வேண்டியதாகவும் அமையலாம்.எவ்வாறாயினும் புதிய வருடத்தை மகிழ்ச்சியுடன் ஆரம்பிக்கவும், தளராத தன்நம்பிக்கையுடன் எம் வாழ்வின் இலக்கு நோக்கி பயணிக்கவும் எம் மனங்களையும் உள்ளத்தையும், அறிவினையும் தட்டி எழுப்பி உற்சாகப்படுத்துவோம்.

புதிய ஆண்டில் நாம் செய்ய வேண்டிய புதிய கருமங்களை முறையாக திட்டமிடுவோம். எமக்கு இறைவனால் கொடுக்கப்படுகின்ற காலம் என்னும் கொடையை வினைத்திறனான முறையிலும் வீணடிக்காத வகையிலும் பயன்படுத்துவதற்கு எமது திட்டமிடலும், நேரமுகாமைத்துவம் மிக அவசிய மாகும். இதற்கு எமது மனம் சிந்தனை எண்ணம் யாவும் ஒருமித்து குறித்த இலக்கு நோக்கி செயற்பட முறையான திட்டமிடலை மேற்கொள்ளவேண்டும். "எண்ணியன முடிதல் வேண்டும் நல்லவே எண்ணல் வேண்டும்" என கவிஞர் பாரதி பாடினார். ஒருமித்த மனத்துடன் எண்ணும் எண்ணங்கள் யாவிலும் வெற்றி உண்டாகும் என்பது எமது நம்பிக்கை மனதில் திடீரென்று தோன்றும் ஒரு கருத்து அல்லது அபிப்பிராயம் தான் எண்ணம் ஆகிறது. எண்ணங்களை உணர்வுகளின் விம்பம் எனலாம். நாம் எமது எண்ணங்களுக்கு கொடுக்கும் வடிவமே எமது செயல்களாகின்றது. எனவே எமது எண்ணங்கள் நேரானவையாகவும், முற்போக்கு சிந்தனையாகவும், விழுமியங்களை உள்ளடக்கியதாகவும், சமூக அர்ப்பணிப்புள்ளவையாகவும் அமைவதாக இருந்தால் எமது எதிர்காலம் சிறப்பாக அமையும்.பிறக்கும் புதிய வருடத்தில் எமது எண்ணங்கள் சிந்தனை, சொல், செயல்கள் புதியனவாகவும், மாற்றத்தை எமது தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப வாழ்விலும், சமூக வாழ்விலும் ஏற்படுத்த வேண்டும். எமது நலனில் அக்கறையுள்ளவர்களோடு கலந்து ஆலோசித்து முடிவெடுத்து இறுதித்தீர்மானத்திற்கு வரலாம்.

சிலர் எமது உயர்வான எண்ணங்களை திசைதிருப்பி எமது எதிர்கால திட்டங்களை குழப்புபவர்களாகவும் அமைந்திடலாம். எனவே நாம் எமது திட்டமிடலை செய்யும் போது தனியாக மேற்கொண்ட பின் நம்பிக்கையான நபரிடம் எமது முடிவை தெரியப்படுத்தலாம்.

மலரப்போகும் புதிய ஆண்டில் நாம் வகுக்கும் புதிய திட்டங்கள், நோக்கங்கள், இலக்குகள் பயன் நல்குவனவாக அமைய இக்கருத்துக்கள் உங்களுக்கு உதவி புரியும் என நம்புகின்றேன். கிறிஸ்மஸ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

## இறைவனின் மனிதத்தை நோக்கிய தேடலில் கிறிஸ்து

ரெ.றொமன்சன்
புனித வளனார் அ.ம.தி. குருமடம்



இறைவனின் மனிதத்தை நோக்கிய தேடலில் மனிதன் என்பவன் யார் என்ற கேள்வி அன்று தொடக்கம் இன்றுவரை கேட்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. மனித வாழ்க்கையில் கிடைக்கப்பெறுகின்ற அனுபவங்கள், உணர்வுகள், பிரச்சினைகள் போன்றவற்றின் வித்தியாசங்களை உணர்ந்துகொள்ள முடிந்த மனிதனுக்கு மனிதன் பற்றிய வரைவிலக்கணத்தைக் கொடுப்பதற்கு முடியாதுள்ளது. அரிஸ்ரோட்டிஸ் புறொயிட் "உணர்ச்சி மனிதனாகவும்", கபிரியேல் மாசல் "பிரச்சினைக்குரிய மனிதனாகவும்", புறொக் "கற்பனை மனிதனாகவும்", நீட்சே "உயர்ந்த மனிதனாகவும்" மனிதனைப் பார்க்கின்றார்கள்.

இவ்வாறான பின்னணியில் கடவுள் மனிதனை எப்படிப் பார்க்கின்றார்? தி.பா. 8:5 இல் கடவுள் மனிதனை தனக்கு சற்றே சிறியவராகப் படைத்து மாட்சியையும், மேன்மையையும் முடியாக சூட்டியுள்ளார். மனிதனின் பிறப்பைப் பற்றிப் பார்க்கும்போது தொ.நூ. 1: 27 இன் படி "கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார். கடவுள் உருவிலேயே அவர்களைப் படைத்தார்" எனச் சொல்கிறார்.

கடவுளின் திருவுளத்தில் மனிதன் நல்லவன். மனிதத் தன்மை கொண்டவன். கடவுளின் சாயலாகவும், பாவனையாகவும் கொண்டு வாழ்பவன் என்பதைக் காண்கின்றோம். இவ்வாறு கடவுளால் நல்லவன், மனிதத் தன்மை கொண்டவன் என பெருமை பாராட்டப்பட்ட மனிதனிடமிருந்து ஏன் இறைவன் மனிதத்தை தேடவேண்டும்? ஆம் தேடத்தான் வேண்டும். அன்று ஏதேன் தோட்டத்தில் ஆதாமும் ஏவாளும் செய்த பாவம் தொ.நூ 3:14-17 வரையுள்ள கடவுளின் தீர்ப்பும் வாக்குறுதியும் என்ற பகுதி இதனை தெளிவுபடுத்துகின்றது. அதனைத் தொடர்ந்து வந்த மக்கள் செய்த பாவங்கள் இறைவனிடமிருந்து விலகிச் செல்ல காரணமாக அமைந்தன. (நாமும் விதிவிலக்கல்ல) இவ்வாறு பிரிந்து சென்ற மனிதனை இறைவன் கைவிட்டு விடவில்லை. தொடர்ந்தும் தன் அன்பினால் மீண்டும் அவர் பக்கம் திரும்பிவர அழைப்பு விடுத்தார். ஆனால் இதை உணராமல் இந்த உலகம் மீண்டும் மீண்டும் பாவம் எனும் பிடிக்குள் சிக்கிக் கொண்டே இருக்கிறது. எம் மனித மனங்கள் மாறவில்லை. இறுதியாக இவ் உலகு வாழ்வு பெறும் பொருட்டு அதுவும் நிலைவாழ்வு பெறும் பொருட்டு கடவுள் தம் ஒரே மகனையே இவ் உலகிற்குக் கொடுக்கத் திருவுளமானார். அந்தளவுக்கு இறைவன் உலகின் மேல் அன்பு கூர்ந்தார். அதாவது இறைவன் நினைத்திருந்தால் இயேசுவை ஒரு தலைமைக்குருவின் வீட்டிலோ அல்லது சட்டவல்லுநரின் வீட்டிலோ அல்லது பணக்கார வீட்டிலோ பிறக்க வைத்திருந்திருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் இயேசு மாமன்னனாக இவ்வுலகைச் சுற்றி வந்திருப்பார். அனால் இறைவன் இயேசுவை மனிதத்தை மதிக்கின்ற ஒரு சாதாரண தச்சுத் தொழிலாளியின் வீட்டில் பிறக்க வைத்தவரென்றால் இங்கேதான் இறைவனின் மனிதத்தை நோக்கிய தேடல் தீவிரம் அடைகின்றது. இன்று எம் சமுதாயத்திலே கண்ணூடாகப் பார்க்கின்ற போராட்டங்கள், கலகங்கள், சண்டைகள், அரசியல் குழப்பங்கள், போதைப்பொருட்கள், சீரழிவுகள் என்று சொல்லி மனிதநேய சீரழிவுகளை அடுக்கிக் கொண்டே செல்லலாம்.

2018 ஆண்டுகளாக இயேசு பிறந்து கொண்டுதான் இருக்கின்றார். அவர் எங்கள் உள்ளங்களில் பிறக்காத வரைக்கும் இறைவனின் மனிதத்தை நோக்கிய தேடல் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும். வீடுகளிலும், ஆலயங்களிலும் வெளியாடம்பரங்களினூடாக பிறக்கின்ற இயேசுபாலன் எம் உள்ளத்திலே பிறக்க வேண்டும். அப்போதுதான் இறைவனின் மனிதத்தை நோக்கிய தேடலின் மறு கிறிஸ்துவாக நாம் மாறமுடியும்.

## கிறிஸ்மஸ் சேலை....

ஞா.ஞானேஸ்வரி

சாந்தன் மிகுந்த யோசனையுடன் நடந்து கொண்டிருந்தான். விடிந்தால் கிறிஸ்மஸ் பண்டிகை ஒவ்வொரு வருடமும் கிறிஸ்மசுக்கு மனைவிக்கு ஒரு நல்ல சேலை வாங்கிக் கொடுக்க விரும்புவதும், அது கை கூடாமல் போவதும் கவலை தரும் விடயம். அவனது மனைவி நிலா மிகவும் நல்ல பெண். இருப்பதே போதும் என்று நினைப்பவள். அந்த அன்பு மனைவிக்கு நல்ல நாளில்கூட எதுவும் வாங்கிக்கொடுக்க முடியவில்லையே என்று நொந்து போனான். பண்டிகைகளும், விழாக்களும் பணக்காரருக்கு மட்டுமே என்று தான் நினைக்கத் தோன்றியது. கூலித் தொழிலாளியான சாந்தனால் அவனது குழந்தைகளுக்கு மட்டுமே உடைகள் வாங்க முடிந்தது. எவ்வளவோ முயன்றும் அவனால் மனைவிக்கு ஒரு சேலை வாங்கவே முடியவில்லை. அன்றாடம் சாப்பிடுவதே பெரிய போராட்டமாக இருக்கும்போது அவனால் என்னதான் செய்ய முடியும்?

மனத் துக்கத்துடன் நோய் வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த தன் நண்பனைப் பார்ப்பதற்காகச் சென்றான். பார்த்துவிட்டு வெளியில் வந்தபோது, ஒரு காரின் அருகே நின்று இரண்டு பெரிய மனிதர்கள் கவலையுடன் பேசிக்கொண்டிருந்தது அவன் காதுகளில் விழுந்தது. "அண்ணா என்னாலேயோ உன்னாலேயோ அப்பாவோட நைட் தங்க ஏலாது. ஊருக்குப் போயிருக்கிறவங்க கிளம்பி வர்றாங்களாம். யாராவது ஒருத்தர் காலையில் வந்துடுவாங்க... கூலிக்காவது யாரையாவது பிடிச்சாகனும். ஆயிரம் ரூபா குடுக்கலாம்... ம்..." "ஆமா தம்பி... இரவு மட்டும் பார்த்துக்கிட்டாலே போதும்... காலையில் எல்லாருமே வந்திடுவாங்க..." அவங்களைக் கடந்து கொண்டிருந்த சாந்தனுக்குள் ஒரு மின்னல் அடித்தது.

உடனே அவர்களிடம் சென்று தான் பார்த்துக்கொள்வதாகவும் காலையில் கிறிஸ்மஸ் பூசைக்குப் போவதால் எவரையாவது காலையில் வருவதற்கு ஏற்பாடு செய்யும்படியும் அவர்களுக்கு கூறினான். அவர்களுக்கோ சொல்லமுடியாத மகிழ்ச்சி. உடனேயே பெரியவர் சட்டைப் பையிலிருந்து ஆயிரம் ரூபாய்த்தாளை



உருவ, சாந்தன் மறுத்து காலையில் வாங்கிக் கொள்வதாகக் கூறினான். மனைவிக்குப் போண் பண்ணி காலையில் பூசைக்குப் போவதற்கு ஆயத்தமாக இருக்கும்படி சொல்லிவிட்டு நோயாளியான பெரியவரை எவ்வளவோ சிரமங்களுக்கு மத்தியில் பராமரித்தான்.

வைத்தியசாலை ஜன்னலை விலக்கி வெளியே பார்த்தபோது நள்ளிரவுத் திருப்பலி நடைபெறுவதை அறிய முடிந்தது. பாடல், செபங்கள் என்பன ஒலிபெருக்கி மூலமாக காதுகளில் வந்து விழுந்த போது கவலையாக இருந்தது. பெருமூச்சுடன் திரும்பி பெரியவரை பார்த்தான். அவர் கை கால்களைக் குறுக்கிக் கொண்டு படுத்திருப்பது குழந்தை இயேசு படுத்துறங்குவது போல் தோன்றியது. ஒரேயொரு கணம் தான் அவனுக்கு திக் என்றிருந்தது. கண்களைக் கசக்கிக் கொண்டு மீண்டும் மீண்டும் பார்த்தான், பெரியவர் அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்தார். ஆனால் அவன் மனதில் தோன்றிய எண்ணம், ஒரேயொரு கணம் அவன் கண்ட குழந்தை இயேசுவின் தோற்றம் மனதைப் பிசைந்தது.

விடிந்தது பெரியவரின் உறவுகள் கும்பலாக வந்தனர். சாந்தன் ஒதுங்கி வெளியே வர பின்னாலேயே மூத்த மகன் ஆயிரம் ரூபாவை எடுத்து நன்றி கூறியபடி சாந்தனிடம் தர அவன் மறுத்தான். அவரோ... இன்னும் அதிகமாக எதிர்பார்க்கிறானோ... என நினைத்து மேலும் ஒரு ஆயிரம் எடுத்து இரண்டாயிரமாக நீட்டினார். அவனோ தான் இரவு முழுவதும் கண் விழித்துப் பணி செய்தது குழந்தை இயேசுவுக்கே என்ற நினைப்பில் அவருடைய பணத்தை மறுத்து விட்டு வெளியே வந்தான். இப்போது அவனுடைய மனதில் சொல்ல முடியாத சந்தோசமும் நிம்மதியும் நிலவியது. மனைவிக்குச் சேலை அடுத்த கிறிஸ்மஸ் பண்டிகைக்கு கட்டாயம் எடுக்க வேண்டும். தன் மனைவி தன்னைப் புரிந்து கொள்வாள் என நினைத்தபடி காலைப் பூசைக்காக வீட்டை நோக்கி விரைந்தான்.

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## கிறிஸ்மஸ் நாடகங்கள்

உலகெங்கும் கிறிஸ்துவின் பிறப்பினை கொண்டாடுகின்ற ஒரு காலமாக திருவருகைக்காலம் என அழைக்கப்படுகின்ற இக்காலம் காணப்படுகின்றது. கிறிஸ்து பிறப்பினையொட்டிய பல்வேறு 'கரோல்' இசை நிகழ்வுகளும், நடனம், நாடகம் என பல்வகைப்பட்ட நிகழ்வுகளும் உலகெங்குமே கொண்டாடப்படுகின்றன. எமது மண்ணிலும் 'ஒளிவிழா' என்ற பெயரில் நிகழ்த்தப்படும் நிகழ்வுகளும் நீண்டகாலமாக வழக்கில் உள்ளன. அதில் கிறிஸ்து பிறப்பினை ஒட்டிய நாடகங்கள் பலவும் பங்குகள் தோறும் மேடையேற்றப்படுகின்றன. அவ்வாறு கிறிஸ்து பிறப்பினையொட்டியதாக மேடையேற்றுகின்ற நாடகங்களையே 'கிறிஸ்மஸ் நாடகங்கள்' என்பர். இதற்கு நீண்ட பாரம்பரியமும் தொடர்ச்சியும் இருப்பதனை பலரும் அறிந்ததில்லை. எனவே இக்கட்டுரை கிறிஸ்மஸ் நாடகங்களைப் பற்றிய ஒரு பார்வையை முன்வைக்கின்றது.

கிறிஸ்தவ கலைமரபிலே செல்வாக்கு செலுத்துகின்ற காலமாக மத்திய காலப்பகுதி காணப்படுகின்றது மத்தியகால ஐரோப்பாவிலேயே கிறிஸ்தவ நாடகங்கள் தோற்றம் பெற்றன. தொடக்ககாலத்தில் உரோமாபுரியில் இருந்த நாடகமரபானது கத்தோலிக்க திருச்சபையினால் தடைசெய்யப்பட்டது. மத்திய காலத்தின் நடுப்பகுதியில் கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவினை ஒட்டியதாக உருவாக்கப்பட்ட 'றொப்ஸ்' சடங்குகளில் இருந்து தேவாலயத்துக்குள்ளேயே நாடகம் வளர்ந்தது. அவ்வாறு தேவாலயத்தில் வளர்ந்த நாடகங்கங்களை பொது வணக்க நாடகங்கள் என்பார்கள். அதன் வளர்ச்சி தேவாலயத்திற்கு வெளியே சென்றபோது மறைஞான நாடகங்கள், அற்புத நாடகங்கள், ஒழுக்கப்பண்பு நாடகங்கள் என பலவகைகளாக வளர்ச்சிபெற்றன. அதில் மறைஞான நாடகங்கள் உலக படைப்பு முதல் உலகு முடிவு வரையான சம்பவங்களை சித்திரிப்பவையாக நிகழ்த்தபட்டன. அத்தகைய நாடகங்களிலேயே கிறிஸ்துவின் பிறப்பினை ஒட்டிய நாடகங்களும் உள்ளடங்கி இருந்தன.

ஆனால் அது தனி நாடக மரபாக எப்போது மேற்கிளம்பியது என்பதற்கு சரியான தகவல்கள் இல்லாத போதும் கி.பி 1223ம் ஆண்டு கிறிஸ்மஸ் இரவுப் பூசையில் பிரான்சிஸ் அசீசியார் கிறிஸ்துவின் பிறப்புக் காட்சியை தேவாலயத்தில் நிகழ்த்திக் காட்டியதாகவும். அதில் இருந்தே "கிறிஸ்மஸ் நாடகம்" உருவாகியதாகவும் கூறப்படுகின்றது. பாலன் குடில் வைக்கும் வழக்கத்தினையும் அவரே அறிமுகம் செய்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவ்வாறு உருவாகிய நாடக மரபானது பருவச்சுழற்சி நாடகங்களாகவும் வளர்ந்து இன்று உலகம் முழுவதும் கிறிஸ்மஸ் காலத்தில் கரோல் பாடல்களையும் நாடகங்களையும் ஒன்றிணைத்த நிகழ்வுகளாகவும் நடைபெற்று வருகின்றன.

**கிறிஸ்மஸ் நாடகங்களின் பண்புகள்**

கிறிஸ்மஸ் நாடகங்கள் கிறிஸ்து பிறப்பின் மகிழ்வினை வெளிப்படுத்தும் நாடகங்களாகவும், பிறப்புடன் தொடர்புபடுகின்ற சிந்தனைகளை சமகாலத்தில் வழங்குகின்ற நாடகங்களாகவுமே மேடையேற்றப்பட்டன. பின்வரும் மூன்று வகையாக இந்நாடகங்கள் காணப்படுகின்றன.

1. கிறிஸ்து பிறப்பின் வரலாற்றினைச் சித்திரிக்கும் நாடகங்கள்
2. கிறிஸ்து பிறப்பின் வரலாற்றினை காலத்தோடு தொடர்புபடுத்தும் நாடகங்கள்.
3. கிறிஸ்து பிறப்பின் செய்தியை சமகால கதைகள் மூலமாக வெளிப்படுத்தும் நாடகங்கள்

இதில் முதல் வகைமையே மிகப் பழைமையானது. திருவிவிலியத்திலே கூறப்படுகின்ற இயேசுவின் பிறப்பு நிகழ்ச்சியை அப்படியே தத்ரூபமாக மேடையேற்றுவது. குறிப்பாக திருக்குடும்பம் சனத்தொகைக் கணக்கெடுப்புக்காக பெத்லகேம் செல்வதும், அங்கு பேறு-காலம் உருவாகுவது, சத்திரங்களில் இடங்கிடைக்காமை, இறுதியில் மாட்டுத் தொழுவத்தில் இயேசு பிறப்பது, பிறப்பின் செய்தி இடையருக்கு அறிவிக்கப்படுவது, ஞானியர் மூவர் வால் வெள்ளியின் துணையுடன் இயேசுவை தேடி வருவது, கண்டு மகிழ்வடைவது போன்றதான காட்சிகளை அடிப்படையாகக் கொண்டு காணப்பட்டது.

இரண்டாவது வகை நாடகங்களில் வரலாற்று சம்பவங்கள் தெரிவு செய்யபட்டவையாக எடுக்கப்படுவதுடன் சமகால பிரச்சினைகளும் இணைக்கப்பட்ட நாடகங்களாகவே அவை காணப்பட்டன. மத்தியகாலத்தில் மேடையேறிய 'இரண்டாவது இடையன்' என்ற நாடகத்தினை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

மூன்றாவது வகை நாடகமா-னது வரலாற்றுச் சம்பவங்களை மேடையில் காட்டாது அந்த செய்தியை அல்லது அதன் இறையியல் கருத்தினை கருப்பொருளாகக் கொண்டு முழுமையாக சமகால கதைகளை மேடையேற்றும்



பண்பினைக் கொண்டது. இந்த மூன்றாவது வகைமையே இன்று உலகம் முழுவதும் காலத்துக்கு ஏற்ப இற்றைப்படுத்தப்பட்டவையாகக் காணப்படுகின்றன. பல்வேறு நவீன நாடகங்களின் உத்திகளைப்பயன்படுத்தி இந்நாடகங்கள் மேடையேறுகின்றன.

கிறிஸ்மஸ் நாடகங்கள் இயேசுவின் பிறப்பின் மகிழ்வைச் சித்திரித்தல், பிறப்பின் பொருளை வாழ்வோடு இணைத்து நோக்குதல் என்ற குறிக்கோள்களுடனேயே மேடையேற்றப்பட்டுள்ளமையை உணர முடிகின்றது.

**தமிழில் கிறிஸ்மஸ் நாடகங்கள்**

இலங்கையில் கத்தோலிக்க மதத்தினைப் பரப்ப 15 ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த போத்துக்கேயருடன் வந்த யேசு சபைக் குருக்கள் நாடக அறிவோடு வந்ததுடன் பல நாடகங்களை போத்துக்கேய மொழிகளிலும், சுதேச மொழிகளிலும் மேடையேற்றியமைக்கு பல்வேறு ஆதாரங்கள் காணப்படுகின்றன. தமிழ் நாட்டில் 1556 ஆம் ஆண்டில் அன்றிக் அடிகளாரின் காலத்தில் யேசுவின் பிறப்புக் காட்சிகள் கோவில் சார்ந்த வெளியில் நடிக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. சவிட்டு நாடகம் என்ற ஒரு வகை நாடகமும் தமிழ்நாட்டில் காணப்பட்டுள்ளது. 1850 ஆம் ஆண்டில் 'மூவரசர்




நாடக வாசாப்பு' ஆரோக்கியசாமி என்பவரினால் எழுதப்பட்டு சவிட்டு நாடகமாக மேடையேற்றப்பட்டுள்ளது. தமிழ் நாட்டுக்கும் ஈழத்துக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுவதனால் அங்கிருந்து பிரதிகள் இங்கு கொண்டுவரப் பட்டிருக்கலாம்.

**கூத்துவடிவில் கிறிஸ்மஸ் நாடகங்கள்**

இங்கிருந்த சுதேச கலை மரபுகளையும் மதப் பரப்புதல்களை மேற்கொண்ட சபைகள் பயன்படுத்தியமையை அறிய முடிகின்றது. அந்தவகையில் இங்கிருந்த கூத்து மரபுகளைப் பயன்படுத்தி புனிதர்கள் வேதசாட்சிகளின் நாடகங்களை மேடையேற்றும்

காவலூர் யோவான்

வழக்கமும் காணப்பட்டுள்ளது. அவ்வாறு உருவாக்கப்பட்ட நாட்டுக்கூத்துக்களில் மிகவும் பழைய நாட்டுக்கூத்தாக காணப்படுவது மூவிராசாக்கள் கூத்து ஆகும். இது சிங்கள நாடகம மரபிலும் ரஜதுங்கட்டுவ என்ற பெயரில் நிகழ்த்தப்பட்டது. மன்னாரில் இம்மரபில் ஆடப்பட்ட பழைய கூத்து பிரதியாக மூவிராசாக்கள் காணப்படுகின்றது. இதனை பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் 1966 ஆம் ஆண்டு பதிப்புச் செய்துள்ளார். நளவன்குளத்தினைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரினால் இது எழுதப்பட்டதாக பெஞ்சமின் செல்வம் அவர்கள் குறிப்பிடுகின்றார். அதேவேளை கிபி 16ஆம் நூற்றாண்டில் பிறந்தவராகக் கருதப்படுகின்ற மன்னார் மாதோட்டத்தினைச் சேர்ந்த லோறஞ்சுப்புலவர் 'மூவிராயர் வாசகப்பா' என்பதையும் எழுதியுள்ளார்

அதேவேளை யாழ்பாணப் பிரதேசத்தில் 1856 அளவில் கரையூரைச் சேர்ந்த புலவர் சந்தியோகு அவர்களும் ஒரு மூவிராசாக்கள் கூத்தினை எழுதியுள்ளார் என அறியப்படுகின்றது. ஆனால் அதன் பிரதிகள் ஏதும் தற்போது கிடைக்கப்பெறுவதாக இல்லை. இவ்வாறு கூத்துமரபிலே கிறிஸ்துவின் பிறப்பினை வெளிப்படுத்துகின்ற நாடகங்கள் பலவும் எழுதப்பட்டுள்ளன. 1966 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் வடமோடிக்கூத்துமரபில் 'பாலன் பிறந்தான்' என்னும் கூத்து திரவியம் இராமச்சந்திரன் அவர்களால் எழுதப்பட்டுள்ளது. அவ்வாறே அருட்திரு நீ. மரியசேவியர் அடிகள் அறுபதுகளில் 'மூவேந்தர்' என்னும் நாட்டுக்கூத்தினை எழுதி உரும்பிராய் பங்கிலே மேடையேற்றினார். அக்கூத்தும் அண்மையில் திருமறைக் கலாமன்றத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. அது தவிரவும் திருமறைக் கலாமன்றத்தினால் 'இடமில்லை', 'ஏமாந்தான் ஏரோதன்' போன்ற கூத்துக்களும் எழுதப்பட்டு மேடையேற்றபட்டன. இவ்வாறு கூத்துவடிவில் கிறிஸ்மஸ் நாடகங்கள் பலவும் மேடையேற்றப்பட்டுள்ளன. அவை பற்றிய தகவல்கள் பூரணமாகக்கிடைக்கப் பெறவில்லை.

**உரை நடை நாடகங்கங்கள்**

ஆங்கிலேயர் காலத்தில் அறிமுகமாகிய உரை நாடக மரபிலே ஈழத்தில் பல கிறிஸ்மஸ் நாடகங்கள் எழுதப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் 'இயேசு வந்தார்' 'தேவபாலன்' 'ஒளிபிறந்தது' என பல நாடகங்கள் எழுதப்பட்டுள்ளன. மரியசேவியர் அடிகள் 1965 ஆம் ஆண்டு நாரந்தனையிலே மிகப்பிரமாண்டமான அளவில் 'அமைதியின் அண்ணல்' என்ற கிறிஸ்மஸ் நாடகத்தினை எழுதி மேடையேற்றினார். தெடர்ந்து 1967 இல் 'கன்னிபெற்ற கடவுள்' என்ற நாடகத்தினையும் 1971 இல் 'அருளும் இருளும்' என்ற நடன நாடகத்தினையும் எழுதி மேடையேற்றினார். இதற்குப்பின் பலரும் இவ்வகையான நாடகங்களை எழுதினர். கவிஞர் நாவண்ணன், அருட்தந்தை மரியாம்பிள்ளை, வாகரைவாணன், குழந்தை செபமாலை, பிலிப்நேரி, பி.எ.சி.ஆனந்தராஜா.. எனப் பலரும் நாடகங்களை எழுதினர். இன்றும் பல இளைய தலைமுறை எழுத்தாளர்களும் பல்வேறு நாடகங்களை எழுதி வருகின்றனர். இந்நாடகங்கள் ஆய்வுக்குரியவையாகக் காணப்படுகின்றன.

எனவே ஒளிவிழாக்களில் கிறிஸ்மஸ் நாடகங்களை ஒரு சடங்காக, கடமையாக நிகழ்த்தும் வழக்கத்தினை விடுத்து அதனை பயன் தருகின்ற கலைமரபாக கருதி அதிசிரத்தையுடன் மேடயேற்றுவதால் தொடரும் பாரம்பரியத்திற்கு வழி கோலுவதுடன் கிறிஸ்து பிறப்பின் செய்தியை பல்வேறு கோணங்களில் மக்கள் தரிசிப்பதற்கும், பங்குமக்களை ஒன்றிணைப்பதற்கும், அவர்களது திறமைகளை வளர்ப்பதற்கும் பயன்படுத்த முயல வேண்டும்.

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## மலியும் கேளிக்கைகளில் நலியும் நத்தார்...

இயேசுவின் பிறப்பைக் கொண்டாட நம்மத்தியிலும், உலக அரங்கிலும் நவ-மான திட்டங்கள் நலமாகத் தீட்டப்பட்டு வருகிறது. இந்நிலையில் கிறிஸ்து பிறப்பு விழா அர்த்தமிழந்த ஆடம்பரப் பண்டிகையாக அரங்கேறுவது எமக்கு புதியதொரு விடயமல்ல.

விற்பனைப் பண்டம் விலை பேசப்படும் பகிரங்கச்சந்தையில் பாலன் பிறப்பும் விற்பனை செய்யப்படுகின்றது. நோய்களுக்காக மாத்திரைகள் கண்டு பிடிக்கப்பட்ட காலம் போய் மாத்திரைக் காக நோய் கண்டுபிடிக்கும் மகத்தான மிலேனிய யுகத்தில் நத்தாா்ப் பண்டிகை நலிவடைந்து செல்வது ஆச்சரியமில்லை யென்றுதான் பலருக்கும் தோன்றும்.

இயேசுபாலன் இவ்வுலகில் அவதரித்த வேளை அப்பிறப்பின் செய்தி முதலில் சாதாரண, எளிய, பாமர இடை யா்களுக்கே அறிவிக்கப்பட்டது. அவா் பிறப்பதற்கு சத்திரத்தில் இடமிருக்க வில்லை. மாட்டுத் தொழுவமே கை கொடுத்தது. கன்னி மரியாள் கந்தல் ஆடையால் குழந்தையைப் போர்த்தி முன்னட்டியில் கிடத்தியிருந்தாள்.

இவ்வாறாக ஏழ்மையின், சின்னமான அந்த ஆண்டவனை நாம் எவ்வாறு சந்திக்கத் துணிகின்றோம்? மூவிராசாக்கள் குழந்தை இயேசுவை அரச மாளிகையில் காணத் துடித்தது போன்று நாமும் இயேசுவை மாடங் களிலும், பட்டாடையிலும், பஞ்சணைகளி லும், பலகாரங்களிலும், கேளிக்கை களிலும், விருந்துகளிலும் காணத்துடிக் கின்றோம். ஏரோது மன்னன் தனக்கெதி ராக ஓர் அரசன் பிறந்திருக்கிறான் என கலக்கமுற்று அரச மாளிகைகளில் எல் லாம் தேடி காண முடியாத நிலையில் வெகுண்டெழுந்து யூதேயா நாட்டில் இருந்த இரண்டு வயதுக்குட்பட்ட பச்சிளம் பாலகர்களை பலியெடுத்தான். விளைவு பலிக்கவில்லை. நாமும் கடவுளைத் தேடக் கூடாத இடமெல்லாம் தேடி ஆலாய் பறக்கின்றோம். முடிவு வாழ்க்கை துன் பத்தில் துவண்டு விடுகிறது. இறை-வனைத் தேடியும் வழிபட்டும் அவனைக் காண முடியாது. அவன் அருள் பெற முடியாது நாம் ஏன் தவிக்கின்றோம்?

**"கடவுள் ஏன் கல்லானார் – மனம்**
**கல்லாய் போன மனிதர்களால்"**

கண்ணீருக்கும் கவலைக ளுக்கும் துன்பதுயரங்களுக்கும் சமூக சீரழிவுகளுக்கும் காரணம் என்ன என் பதை மூலவேர் மட்டும் சென்று ஊடுரு விப் பார்ப்போமானால் நாம் கடவுளை மறந்ததால் வந்த விளைவுகளே இவை என்பதை வெள்ளிடை மலையாக கண்டு கொள்வோம். சமயங்களை சில சமயங்க ளில் மனிதர்கள் மறந்து விடுகின்றனர்.

கிறிஸ்மஸ் விழாக்கள் இயேசு வின் வருகையின் நோக்கத்தை இழந்து கேளிக்கை கொண்டாட்டம், மதுபான கலாசாரத்தை அணைத்து நிற்கிறது. ஞாயிறு பூசை தொட்டு நத்தார் பூசைவரை கடமைக்கு காண்கின்றோம். நள்ளிரவுப் பூசைகள் பலருக்கு நல்லிரவுகளாகவும் மாறிவிடும் அவலத்தை யாருக்கு எடுத்துரைப்போம். இதனைத்தான் கவி ஞன் ஒருவன்

**"ஆலயத்திற்கு வெளியே**
**செருப்புகள் கழற்றப்பட்டிருக்கிறது**
**ஆனால் அழுக்கு உள்ளே போகிறது"**

என ஆண்டவனை ஏமாற்றும் பக்தர் கூட்டத்தை சாடியிருந்தார். இத னைத் தான் இறைமகன் இயேசுவும் "வெள்ளை அடிக்கப்பட்ட கல்லறை களே உங்களுக்கு ஐயோ கேடு!" என போலி பக்தர் கூட்டத்தை பரிகசித்துப் பேசினார்.

கிறிஸ்து பிறப்பு விழா கிறிஸ்த வர்களாகிய எம் வாழ்வில் பொருள் பெற்றுத் திகழ வேண்டுமெனின் போா-ின் விளைவினால் உறவுகளை இழந்து அனாதைகளாக அல்லறபடும் மக்களின் குரலோசைகள் நத்தார் வெடிகளால் எம்



காதுகளை அடைத்துவிடக்கூடாது. விதை-தவைத் தாய்மாரின் கண்ணீா் நத்தாா் மத்தாப் பூக்களால் எம் கண்களை மறைத்து விடக்கூடாது. அங்கங்கள் இழந்து ஊனமுற்று பரிதவிக்கும் எம் சகோ தரா்களின் கையறு நிலையை கேக்கும் மதுக்கிண்ணமும் தாங்கும் எமது கரங்கள் நினைவிற் கொள்ள வேண் டும். வீடிழந்து. வாசல் இழந்து. கொட் டில்களிலும் கூடாரங்களிலும் வாழும் வன்னி மக்களின் நிலையை மாட மாளிகைகளில் நத்தார் குடில் அமைக் கும் எங்கள் மனங்கள் நினைக்க வேண்டும். ஆனால் நாம் இன்று மாட் டுத் தொழுவத்தை மறந்துவிட்டோம். கந்தலாடைகளை கசக்கி எறிந்து விட் டோம். பஞ்சணையில் ஆண்டவனைக் காண விளைகின்றோம். இதனால் வால்வெள்ளி மட்டுமல்ல நட்சத்திரங்கள் கூட வானத்தில் தோன்றாது.

கிறிஸ்தவர்களாகிய எங்களுக்கு கிறிஸ்துவின் வருகையும் பிறப்பும் அர்த்தமுடையதாக அமைய வேண்டும் எனின், புனித நகரப் பயணங்களையும் புத்தாடை களை யும் புறந்தள்ளி வைத்துவிட்டு ஏழை எளியவர்கள் அனாதைகள் பக்கம் எமது முகத்தை திருப்பி கரங்களை நீட்டுவோம். உன்னதங்களிலே இறை வனுக்கு மகிமையும், பூவுலகில் நன் மனத்தோர்க்கு அமைதியும் உண்டாக வேண்டுமெனின் உருக்குலையும் உலக மாயைகளில் சிக்கிவிடாமல் வாழ்வின் வழியாக ஒளியாக வந்துதித்த இறை மகன் இயேசுபால-னை இறை சித்தத் தின் வழியில் எம் உள்ளங்களிலும், இல்லங்களிலும் ஏற்றுக்கொள்ள வேண் டும். இல்லையேல் ஆண்டவனுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்:

**"இயேசுவே! நீர் மீண்டும்**
**இந்த மண்ணில்**
**பிறக்க வேண்டாம்**
**பிறந்தீரென்றால்**
**அன்றே**
**சிலுவையில் அறையப்படுவீர்"**

**அ.ஜான்கவி**
தமிழ் சிறப்புக்கலை 3ம் வருடம்
யாழ். பல்கலைக்கழகம்

## தோல்விகள் எம்மை




பலருக்குத் தோல்வி என்பதே விஷம். ஆனால் தோல்வி அடை யாத மனிதர்களே இல்லை என்பது உலக நியதி. தோல்வியைக் கண்டு நம்மிலே பலர் அஞ்சுகின்றோம்? தோல்வியே வாழ்வின் முடிவு எனத் தீர்மானிக்கின்றோம்?

**தோல்வியடையுங்கள் - ஏனெனில்**
**தோல்வி ஓர் உந்து சக்தி**
**தோல்வி ஓர் உடனிருப்பு**
**தோல்வி ஓர் ஆசான்**
**தோல்வி ஓர் எச்சரிக்கை மணி**
**தோல்வி ஓர் படிப்பினை**
**தோல்வி ஓர புதுமையின் பிறப்பிடம்**
**தோல்வி ஓர் தள்ளிப்போடப்பட்டிருக்கும்**
**– வெற்றியே!**

புலமைப் பரிசில் தேர்வில் தோல் வியா? இன்றைய நுகர்வுக் கலா சாரத்தில் பொருளாதாரத்தில் தோல் வியா? வறுமையிலும். பணம் இன் மையால் சிறந்த பாடசாலைகளில் அனுமதி கிடைக்காத தோல்வியா? சூழ்ச்சியும். இராஜ தந்திரமிக்க உல கில் நேர்மையுடன் நடந்ததால் தோல்வியா? சிறந்த மதிப்பெண் கிடைத்தும் பல்கலைக்கழகம் செல்ல முடியவில்லையே என்ற தோல்வியா? பட்டப் படிப்பு முடித் தும் வேலை உலகிலே நல்ல வேலை கிடைக்கவில்லை என்ற தோல்வியா? இவற்றிலிருந்து நாம் விடுதலைபெற. விடியலை அடைய மாமேதைகளின் வாழ்க்கைப் பாடங்கள் நமக்கு சான்றாக உதவுகிறது.

ஜப்பானியர் ஒருவர் புதுமையாக ஏதாவது படைக்க வேண்டும் என்பது அவரது உத்வேகம். ஆனால் அதற்கேற்ப உந்துசக்தியாக குடும்பச் சூழலோ பொரு ளாதாரச் சூழலோ அமையவில்லை. இருப்பினும் முயற்சியை மட்டும் மூச்சாக் கிக் கொண்டிருந்தார். இதனால் கார்க ளுக்கு பொருத்தப்படும் பிஸ்டன்களைப் புதிய முறையில் பல போராட்டத்திற்குப் பின் வடிவமைத்தார். அதனை விற்பனை செய்ய றொயாட்டோ கார் நிறுவனத்தை அணுகிய போது பலரின் கேலிகளும், விமர்சனங்களுமே அவருக்கு கிடைத் தன. கேலிகளை தனது வளர்ச்சிக்கான வேலியாக்கிக் கொண்டு பயணித்தார். புதிய தொழிற்சாலை ஒன்றினை கட்டத் தொடங்கி அது வெற்றிபெறும் தருணத்தில் ஜப்பானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் அனைத்தும் தரைமட்டமானது. மீண்டும் தொழிற்சாலையை கட்டி திறப்புவிழா காணும் நிலையில் இருந்த போது இரண்டாம் உலகப் போர் மூண்டது. போரிலே கட்டடம் மீண்டும் தரைமட்டமானது. தோல்விக்கு மேலே தோல்வி, ஆனால் எந்தத் தோல்விகளும் அவரை முடக்கிவிடவில்லை. மாறாக மனச்சுமைகள் கூடகூட மனத்தைரியம் பெற்றார். இதன் விளைவுதான் தன் னைக் கேலி செய்த "றொயாட்டா கம் பனியை விட இன்று அதிக கார்களை உற்பத்தி செய்யும் நிறுவனத்தின் உரிமையாளராக உயர்ந்துள்ளார்" அவர்தான் ஹோண்டா ஹோண்டா.

விறகுவெட்டியின் மகன், இவருக்க வறுமையின் காரணமாக கல்வி மறுக்கப்பட்டது. எனவே சிறுவய திலிருந்தே உடல் உழைப்பிற்கு அடிமை யானார். வறுமையில் தோல்வி, 21ம் வயதில் ஏற்பட்ட தொழில் தோல்வி, 27ம் வயதில் உடலில் ஏற்பட்ட நரம்பு மண்டல பாதிப்பு. 46ம் வயதில் தேர்தலில் தோல்வி, 47ம் வயதில் துணை ஜனாதி பதிக்கான தேர்தலில் ஏற்பட்ட தோல்வி இவைகள் எதுவுமே அவரையோ, அவரது இலட்சியப் பயணத்தையோ அசைத்துவிட முடியவில்லை. அவை பலம் ஆகின என்பதே உண்மை. 52ம் வயதில் அமெரிக்க ஜனாதிபதியானார். அதன்மூலம் தோல்விகள் என்றும் வெல்வதுமில்லை. தோல்வியாளர்கள் என்றும் உறங்குவதுமில்லை. என்பதை நீரூபித்துவிட்டார். அவர்தான் மாமேதை ஆபிரகாம் லிங்கன்.

**பிறக்கும் புத்தாண்டு புத்துயிர்ப்புத் தரும்**
**சுபீட்சமான நம்பிக்கையின் ஆண்டாக எமக்கு**
**அமையவேண்டுமெனில் கடந்த காலத்**
**தோல்விகளையே எண்ணி கல்லறைகளை எழுப்பாது**
**வெற்றிப்படி நோக்கி**
**மாடங்களை எழுப்புவோம்**

சோதனைகளை 10ஆண்டு களாக செய்துவெற்றிகண்டவர்தான் தாமஸ் அல்வா எடிசன். 1914ல் பல கோடி மதிப்புள்ள தனது ஆய்வு கூடம் எரிந்த போது தோமஸ் அல்வா எடிசன் சிரித்துக் கொண்டே சொன்னார். "என்னுடைய தவறு கள் எல்லாம் எரிந்துவிட்டன" என்ன மகத்தான மனநிலை. இம் மனித நிலைதான் 1000ற்கு மேற் பட்ட கண்டுபிடிப்புக்களின் வித்துவா னாக அவரை மாற்றியிருந்தது.

இவர்களது மகத்தான வெற்றிக்கு காரணம் தோல்விகள் கற்பித்த படிப்பினைகளும், விடா முயற்சிகளும் என்றால் அது மிகை யாகாது. ஒட்டு மொத்தத்திலே தோல்வி கள் வாழ்வில் முன்னேறத் தேவை யான படிக்கட்டுக்கள் என்பதை உணர்வோம். எனவே இன்று முடிய வில்லையே என்பதை நாளைமுடித் துக் காட்டும் வரை நம்பிக்கையை இழக்க வேண்டாம்.

**தோல்வி அடைவோம் ஆனால்**
**சோர்வடைய வேண்டாம்**
**முயற்சியைக் கைவிட வேண்டாம்**
**விரக்தி அடைய வேண்டாம்**
**சந்தேகம் கொள்ள வேண்டாம்**
**மாறாக சந்தோசம் கொள்வோம்.**
**அதுவே புதுமைக்கான வழி.**

எனவே மாமேதைகளின் வழியில் சமூகத்தில் ஓர் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என நம்பிக்கையுடன் கனவு காண்போம். அந்தக் கனவு நனவாகமாற கடுமை யாக உழைப்போம். வாழ்வில் எளிதாக முன்னேறுவோம்.

**செல்வி. ஆன்றிசா றிச்சட் வேக்மன் (தரம் - 13)**
யா/ கொழும்புத்துறை இந்து ம.வி

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

# என் கேள்விக்கென்ன பதில்!



06

*(மகான், கிளிநோச்சி)*

**கேள்வி: தென்பகுதியில் மாணவர்களால் வெவ்வேறு இடங்களில் இரு கொலைகள் நடந்ததாகத் தெரிய வருகிறது. இரு மாணவர்கள் சக மாணவர்களால் குத்திக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். நாட்டில் என்ன நடந்துகொண்டிருக்கின்றது?**

**ப:** ஆனந்தன், செய்திகளில் கேட்பதும் தொலைக்காட்சிகளில் பார்ப்பதும் இத்தகைய சம்பவங்களாக இருந்தால் வளரும் பயிர்கள் இந்நோய்த் தாக்கங்களுக்கு உட்படுவது தவிர்க்க முடியாததே! ஆகவே, வளரும் பிள்ளைகள் ஆரோக்கியமாக வளர ஆரோக்கியமான சூழல் வீட்டிலும், சமூகத்திலும், நாட்டிலும் உருவாக்கப்பட வேண்டியது இன்றியமையாதது. இவ்வாறான ஆரோக்கியமான சூழல் நம் பிள்ளைகளுக்கு இருக்கிறதா என்பது பெரும் கேள்விக் குறியே! இல்லை என்பதற்கு, நமது நாடாளுமன்றமே இப்போதைக்கு ஒரு வெளிப்படையான சான்று!?

*(மலர், மானிப்பாய்)*

**கே: திருமண வீடுகளில் மற்றவர்களுடைய பாதணிகளை எடுத்துக் கொண்டு அணிந்துகொண்டு போவது இப்போது சர்வசாதாரணமாகி விட்டது. ஏன் இப்படிச் செய்கிறார்கள்?**

**ப:** மலர், தங்களின் வாழ்க்கைச் சோடியை மாற்றமுடியாத நிலையில் பாதணிச் சோடிகளை மாற்றுகிறார்கள் போலும்! நன்றாக யோசித்துப் பார்த்தால், திருமண வீட்டில் சோடி சேருகிற அதேவேளை, சோடி பார்ப்பதும் நடைபெறுகிறது! அவ்வகையில்தான் இப்பிரச்சினையை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். திருமண வீடொன்றில் தனது பாதணிகளை இழந்தவன் எழுதிய கவிதையைக் கவனியுங்கள்: 'உள்ளே ஒரு சோடி சேர்ந்துவிட்டது, வெளியே ஒரு சோடி தொலைந்து போனது!' ஆக, தங்கள் சோடிகளைப் பாதுகாக்க யாரும் எடுத்துவிடாமல் இருக்க, ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சோடிகளைக் கவனமாகப் பார்த்துக்கொள்வதுதான் ஒரே வழி! புரிகிறதா மலர்? பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள் - உங்கள் சோடியை?

*(S.குணம், வடமராட்சி)*

**கே: மாவீரர்தின நாளுக்குப் போயிருந்தீர்களா? எப்படி இருந்தது?**

**ப:** குணம், இவ்வாண்டு சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்திற்குப் போயிருந்தேன். உணர்வு பூரவமாக இருந்தது. இதில் மெச்சக்கூடிய விடயம் என்னவென்றால் மாவீரர்தின நிகழ்வை எந்த அரசியல் கட்சியினுடைய கைகளிலும் கொடுக்காமல் பொதுமக்களாக நின்று செய்ததுதான். அல்லது அப்புனித நிகழ்வையும் அரசியலாக்கி விடுவார்கள். மற்றயது, அந்நிகழ்வில் எந்தவித உரைகளும் இல்லாது இருப்பது அடுத்தபடியான நல்லதொரு விடயம். மேலும், ஆண்டுக்கு ஒருதடவை சென்று இறந்துபோன மாவீரர்களை நினைத்து ஈகைச் சுடரை மட்டும் ஏற்றி விட்டு வருவதல்ல இந்நாளின் நோக்கம்! உண்மையில், அவர்கள் இரத்தம் சிந்திச் செய்த போராட்டத்தினை இரத்தம் சிந்தாமல் தொடரவேண்டும் என்பதை நமது மக்களும் மக்களின் பிரதிநிதிகளும் சிந்தையில் நிறுத்தி உறுதிபூண வேண்டிய நிகழ்வுமாகும். ஆனால், அன்றைய நாளில் வந்து தீபம் ஏற்றிவிட்டு தங்களின் சுயநல அரசியல் இலாபங்களை தேடித் தங்கள் அரசியல் நகர்வுகளை செய்வது போன்றே நமது நாடாளுமன்றப் பிரதிநிதிகளின் அநேக செயற்பாடுகள் அமைகின்றன. எப்போது நமது மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் உறுதியான கொள்கையோடும் நிலைப்பாட்டோடும் செயற்படுகிறார்களோ அப்போதுதான் தெற்கு அரசியல்வாதிகள் ஒரு . நிலைப்பாட்டிற்கு வந்து அரசியல் தீர்வை முன்னெடுக்க முனைவார்கள். இல்லையேல், நமது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை, தேவையான நேரத்தில் பாவித்து விட்டு பின்னர் தூக்கி வீசி விடுகிற கறிவேப்பிலையாக பாவிக்கப்படுவார்கள் - பயன்படுத்தப்படுவார்கள் என்பது உறுதி!

*(ராசா, யாழ்ப்பாணம்)*

**கே: கிறிஸ்மஸ் நெருங்குகின்றது. கொண்டாட்டங்கள் எப்படி இருக்கப்போகின்றன?**

**ப:** மெசியாவாகிய இயேசுக்கிறிஸ்து ஏழ்மையில், எளிமையில், நல்மனம் கொண்டவர்களிடையே வந்து பிறந்தார். இது ஒரு பெரும் மகிழ்ச்சி ஊட்டும் நற்செய்தி, பெரும் மகிழ்ச்சி தரும் திருநிகழ்வு. ஆனால், ஏழ்மையான எளிமையான இவ்விழாவை செல்வந்த விழாவாக எப்படியோ மாற்றிவிட்டார்கள்! அதனால், கிறிஸ்து பிறப்பில் விளங்கிய எளிமை காணாமல் போயிற்று! அரசுகளும், நிறுவனங்களும், அமைப்புக்களும் தங்கள் சுயதேவைகளுக்காக பெரும் ஆடம்பர விழாவாக ஆக்கிவைத்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் நாங்கள் யோசித்துப் பார்க்காமல் ஆவென்றுபோய் அலங்காரங்களையும், அலங்காரங்கள் என்ற பெயரில் அலங்கோலங்களையும் பார்த்து கிறிஸ்மஸ் கொண்டாட்டமென நினைத்துக்கொள்கிறோம். கிறிஸ்து பிறப்பு, 'உன்னதத்தில் கடவுளுக்கு மகிமையும் உலகில் நல்ல மனது படைத்தவர்களுக்கு அமைதி உண்டாவதாக' என்ற அமைதி நம்மில் வந்து தங்க ஆவனைசெய்தால் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் அர்த்தமுள்ளதாக அமையும்.

**அருட்பணி. செ. அன்புராசா அமதி**

**உங்கள் கேள்விகளை, பெயர், முகவரியுடன் குறிப்பிட்டு, 'என் கேள்விக்கென்ன பதில்', 'அமைதித்தென்றல்', உண்ணாப்புலவு, முல்லைத்தீவு என்ற முகவரிக்கோ, anpuomi1970@gmail.com என்ற மின்னஞ்சலுக்கோ, அல்லது 0778 648 548 என்ற எண்ணுக்கு sms, viber அல்லது whatsupக்கோ அனுப்பி வைக்கலாம்.**

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

## குடும்பங்களை இயேசுவின் திரு இருதயத்திற்கு ஒப்புக்கொடுத்தல்



இறைமகன் இயேசு இவ்வுலகில் மனிதனாய்ப் பிறந்து தம் மீட்புப் பணியைத் தொடங்கிய பொழுது முதலிலே திருச்சபையை நிறுவவில்லை. ஆனால் இல்லத்தை நிறுவினார். தமது ஊரை நசரேத் ஆகக்கொண்டார். மீனவரான இராயப்பரைத் திருச்சபைக் (இல்லம்) குத் தலைவராக நியமித்தார். இயேசு தமது மீட்புப் பணியை வெளியரங்கமாக மூன்று ஆண்டுகளே செய்தார். அதற்கு முன் முப்பதாண்டுகள் வீட்டிலிருந்து கொண்டு தம்மையே தயார் செய்தார். தனது முதல் புதுமையையே கலிலேயாவில் உள்ள கானாவூரின் திருமண விருந்திலேதான் செய்தார். சக்கேயுவை நோக்கி நான் உன் வீட்டிலே தங்க வேண்டும் என்று இயேசு கூறவில்லையா? சக்கேயு இயேசுவை அவனது வீட்டில் வரவேற்றபொழுது இயேசு அவனை நோக்கி, இன்று இவ் வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று என்று கூறினார். அதுபோன்றே நாமும் இயேசுவிற்கு நமது குடும்பங்களை ஒப்புக்கொடுப்பதன் வழியாக நமது இல்லங்களில் அவரை வரவேற்றோமானால், நமக்கு இயேசு, "இன்று உன் வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று" என்று கூறுவதைக் கேட்க முடியும்.

இயேசு தம் சீடர்களுக்கு, உலகிற்கு அறிவுறுத்தல் கூறியது போல இவ்வீட்டிற்குச் சமாதானம் உண்டாவதாக என்று கூறுவார்.

இயேசு எமது இல்லங்களில் அன்பின் ஆட்சியை நிலைநாட்ட விரும்புகிறார். எனவே திருஇருதய ஆண்டவரை எமது வீட்டிற்குத் தலைவராக ஆக்க வேண்டும். உங்கள் வீடு அவரைச் சுற்றிச் சுழல்கின்ற வீடாக மாறவேண்டும்.

குடும்பங்களை இயேசுவின் திருஇருதயத்திற்கு ஒப்புக்கொடுக்கும் பொழுது நாம் நம்மையே அன்பினால் கொழுந்துவிட்டெரியும் இயேசுவின் அன்பிற்கே ஒப்புக்கொடுகின்றோம். அவரின் அன்பின் வெளியடையாளமாகிய திரு இருதயத்தில் குடும்பம் பாதுகாப்பு பெறுகிறது. இயேசுவிற்குக் குடும்பங்களை ஒப்புக் கொடுப்பதால் இயேசுவை நம்முடைய வீடுகளுள் வரவேற்கின்றோம். நம் முடைய குடும்பத்தின் அனுபவங்களை அவரோடு பகிர்ந்து கொள்கின்றோம். எனவே எமது குடும்பங்களை ஒப்புக்கொடுத்து முழு உலகையுமே ஆண்டவரின் அன்பினால் அணிசெய்ய குடும்பம் குடும்பமாக திரு இருதய ஆண்டவரில் ஒன்றிணைவோம்.

**அருட்பணி சிங்கராயர் ஸ்ரீவன் (CMF)**

## கிறிஸ்து பிறப்பு விழா பெற்றுக்கொள்வதிலா...? கொடுப்பதிலா...?


கிறிஸ்து பிறப்பு விழாவின் அர்த்தம் பெற்றுக்கொள்வதை விட கொடுப்பதிலேயே. மகிமை பெற்றிருக்கிறது என்பது எம்மைச் சிந்திக்க வைக்கிறது. தமது ஒரே பேறான குமாரனை நமக்காகக் கொடுப்பதற்கே தந்தை அவரை இவ்வுலகிற்கு உன்னதகொடையாக அனுப்பினார். இறைமகன் கிறிஸ்து விண்ணக மேன்மைகளை விடுத்து நம்மை மீட்பதற்காக தம்மையே தந்தார்.

திருமண ஒப்பந்தம் மட்டும் செய்த நிலையில் இருந்த கன்னிமரியா, இறைதிட்டத்தை ஏற்று இதோ நான் அடிமை என்று தம்மையே கொடுத்தார். நீதிமானாகிய சூசையப்பர் நீடிய பொறுமை, பிரமாணிக்கமாக இருந்து பரிசுத்த ஆவியானவரால் கர்ப்பவதியான மரியாவை ஏற்று மீட்புப்பணியில் திருக்குடும்பத் தலைவராகத் தம்மையே கொடுத்தார்.

பெத்லேகம் ஊரில் மாட்டுக் கொட்டிலில் சொந்தக்காரன் கிறிஸ்து பிறப்பதற்காகவே கொட்டிலைக் கொடுத்தான். தேவதூதர்கள் சிறப்பான வாழ்த்துப்பாடலைக் கொடுத்தார்கள். ஆடு மாட்டு மேய்ப்பர்கள் செய்தியை அறிந்தவுடன் உடனே வந்து தங்களின் உள்ளம் நிறைந்த மகிழ்ச்சியையும் புகழ்ச்சியையும் கொடுத்தார்கள்.

மூன்று ஞானிகள் வருகை தந்து பொன், வெள்ளி, தூபம் அர்த்தமுள்ள காணிக்கை கொடுத்தார்கள். இவ்வாறான பலரது அரிய கொடைகளினாலே கிறிஸ்து பிறப்பு விழா அன்று நிறைவேறியது... இன்று கிறிஸ்து பிறப்பு விழாவை நினைவு கூரும் நாம் பெற்றுக்கொள்வதில் மாத்திரம் கவனம் செலுத்துகிறோம் அல்லவா?..

துல்லிய பட்டுப் போன்ற - தூயவள் மரியாவின் மடியில்
மெல்லிய பாலகன் இயேசு - விளக்கென புன்னகைத்தார்
நல்லவர் உள்ளம் போல - நலம் பெறப் பிறந்த செல்வன்
இல்லை எண்ணாதவாறு - இருகரம் விரித்து நின்றார்
மாளிகையும் இல்லையப்பா - மாணிக்கத் தொட்டில் தோற்கும்
தூளி இல்லாத போதும் - தூங்கினார் பாலகன் இயேசு
ஏழை எளியவர்களுக்கு - ஏற்றமே அளிக்க மண்ணில்
தோழராய் இயேசுநாதர் - தோன்றினார் எனக் குறிக்க
வாழவும் வகையில்லாத - வறியவராம் இடையர் குலத்தார்
சூழவே முதலில் காணச் சொல்லி வைத்தார் பிறப்புச் செய்தி
காவலைக் கருதவில்லை - காலத்தைக் குறிக்கவில்லை
மாவலி விலங்கு பூச்சி - வழியினைக் கருதவில்லை
மேவும் அக்குளிர் வருத்தும் - மேனியைக் கருதவில்லை
ஆவலே நெஞ்சுள் தோன்ற - அனைவரும் விரைந்து சென்றார்
மேய்ப்பரை, மேய்ப்பர் கண்டார் - மேலோரின் ஒளியைக் கண்டார்
ஆயரை ஆயர் கண்டார் - ஆடகப் பொன் மெய் கண்டார்
தூயரைத் தூயர் கண்டார் - தொல்புகழ் நேயர் கண்டார்
ஈசனை, ஈயர் கண்ணடார் - இறையன்பே மேயக்கண்டார்



**வன்னிவாழ் இதயம்**
**ம. சூசைமுத்து**

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## மீளாய்வு – 2018


மணிவிழாக்காணும் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்பணி ஜெறோ செல்வநாயகம் அடிகள்


சில்லாலையில் புனித யோசவ்வாஸ் ஆண்டு நிறைவு நாள்


யாழ். மறைமாவட்டத்தில் இளையோர் ஆண்டு யாழ் ஆயரால் அங்குரார்ப்பணம்


மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயருக்கு யாழ் மறை மாவட்டத்தில் மகத்தான வரவேற்பு


யா/புனித பத்திரிசியார் கல்லூரியின் புதிய அதிபராக அருட்பணி. A.P. திருமகன் அடிகளார் நியமனம்.


புனித யோசவ்வாஸ் இறையியல் கல்லூரியின் முதலாவது அணி பட்டதாரிகள் மதிப்பளிப்பு


தும்பளை லூர்து கெபியில் புதிய நற்கருணை சிற்றாலயம் யாழ் ஆயர் அவர்களால் திறந்து வைப்பு


டிஜிற்றல் யுகத்தில் கால்பதிக்கும் புனித வளன் கத்தோலிக்க அச்சகம் ஆசீர்வதித்து திறந்து வைத்தார் யாழ் ஆயர்


புனித யோசவ் வாஸின் திருச்சிலுவை யாழ் மறைமாவட்டத்திற்கு பயணித்தவேளை....


புனித பத்திரிசியார் கல்லூரியின் தொழில் நுட்பக்கூடம் ஜனாதிபதியால் திறந்து வைப்பு


கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் சர்வ மதங்களின் சக வாழ்வு நிகழ்ச்சி


கிளிநொச்சி மறைக்கோட்ட இளையோர் ஒன்று கூடல்


முல்லை மறைக் கோட்டத்தில் நடைபெற்ற நற்கருணைப் பேரணி

# கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## 7ம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 12 . 07 . 1942



விண்ணில் 22 . 12 . 2011

அன்புள்ள அப்பா
அன்பாய் அரவணைத்துக் கரங்களில் ஏந்தி
கனிவோடு பேசி எமக்காகவே வாழ்ந்தவரே
கடமையின் வழவமாய் வைத்தியராய்
இறைவழி நின்று நேர்வழியில்
உன்னதமாய் வாழ்ந்த
உண்மை அன்பின் ஒளியே
இன்னமும் நேசிக்கின்றோம் வாடுகின்றோம்.

அமரர்
வைத்திய கலாநிதி மரிசலீன்பிள்ளை மரியதாசன்(J.P)
(பேரின்பம்)
சுகாதார வைத்திய அதிகாரி (2001 - 2011)
(MOH) யாழ். மாநகரசபை

கண்ணீர் மல்க
குடும்பத்தினர்

AD105

## துயர் பகிர்கின்றோம்

யாழ். மறைமாவட்டக் குருவாகிய அருட்பணி லோறன்ஸ் அடிகளாரின் அன்புத் தாயார் அ.திரேசம்மா அவர்கள் அண்மையில் இறைபதமடைந்தார். அன்னாரின் ஆன்மா இறை சந்நிதானத்தில் இளைப்பாற பிரார்த்தித்து குடும்பத்தினருடன் பாதுகாவலன் துயர்பகிர்ந்து நிற்கின்றது.

## விண்ணக வாழ்வில்

36ம் ஆண்டு நினைவில்



அமரர்
மரியான் சூசைப்பிள்ளை
(ஆசிரியர், சமாதான நீதிவான்)
மண்ணுலகில் - 14.04.1926
விண்ணுலகில் - 03.01.1983

06ம் ஆண்டு நினைவில்



அமரர்
சூசைப்பிள்ளை திரேசம்மா
(மாஸ்றம்மா)
மண்ணுலகில் - 18.02.1928
விண்ணுலகில் - 31.05.2013

"வாழ்வில் உம்மை நேசித்தோம் மரணத்திலும் உம்மை மறவோம்"
ஆண்டவர் சந்நிதியில் ஆனந்தமாய் வாழ்வீர்கள்

இளவாலை மேற்கு
இளவாலை

AD108

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

## விண்ணக வாழ்வில் 45ம் நாள் நினைவஞ்சலி

மண்ணுலகில் 21 . 08 . 1964



விண்ணுலகில் 27 . 10 . 2018

அமரர்
திரு. பாக்கியநாதர் கிளரன்ஸ் யோகநாதன்
"அழைப்பின் குரல் கேட்டேன் என் ஆண்டவர் என உணர்ந்தேன்"
இறைவா,
உன் அருளால் மண்ணில் பிறந்தேன்
மானிடனாய் மனதால் தேடவைத்தாய்
உன்னருளை தினம் தேடிய மனதை மகிழ்வித்தாய்
உன் கொடையால் பகிர்ந்துணர்ந்தேன் உன் அருளை
வரம் அருள்வாய் இளைப்பாற உன் மடியில்

MR.MRS.I.M.PACKIYANATHAR
NO.1111 1577 LAVIRENCE AVE
WEST, NORTH YORK
ONTARIO, M61 1CH
TORONTO, CANADA
0014162451552

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
பெற்றோர்
சகோதரர், உற்றார்,
உறவினர்

AD108

## 12ம் ஆண்டு நினைவு

பிறப்பு 26 . 04 . 1949



இறப்பு 17 . 12 . 2006

அமரர் ஜோன் பிலிப் அலோசியஸ்

" வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம்ஆண்டவருக்கே உரியவர்கள் " உரோ.14:5

ஆண்டு இரண்டு ஓடி மறைந்தாலும் - எம்
நெஞ்சில் நிலைத்திருக்கும் பாசதீபம் - நீங்கள்
உம் நினைவுகள் என்றும் அழியாது
கண்ணில் இமை போல எமைக்காத்த
அப்பாவே - உங்கள்
நினைவுகளுடன் என்றும் வாழ்கின்றோம்.

இல 243, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்- 0212223302

மனைவி, பிள்ளைகள்

## நெஞ்சம் மறவாத 5ம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 17 - 01 - 1937



விண்ணில் 05 - 12 - 2013

AD104

அமரர் சந்தியோ அந்தோனிப்பிள்ளை எட்வேட்ஸ் (J.P)
(இளைப்பாறிய N.R.T.B அத்தியட்சகர்)
"புன் சிரிப்பாலும் கள்ளமில்லா உள்ளத்தோடும்
எம்மை அன்போடு நேசித்த உம்மை
இதயங்களில் சுமக்கிறோம் வான் வீட்டில் உறைந்திட
வேண்டுகின்றோம்.
இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக ஆனையூர்
அடைக்கலநாயகி ஆலயம் குருநகர் கார்மேல் ஆலயம்
ஆகிய ஆலயங்களில் திருப்பலிகள்
ஒப்புக்கொடுக்கப்பட்டன.

உயரப்புலம், ஆனைக்கோட்டை.
மாறா நினைவுகளுடன் குடும்பத்தினர்

## விண்ணக வாழ்வின் நினைவு நாளி

46ம் ஆண்டு



அமரர்
சந்தியாப்பிள்ளை
யோசவ் ரெட்ணசிங்கம்
மலர்வு 14.05.1920 உதிர்வு 16.04.1972

25ம் ஆண்டு



அமரர்
யோசவ்
மேரி மாகிரேற்
மலர்வு 15.03.1924 உதிர்வு 23.12.1993

"உயிர்ப்பும், உயிரும் நானே!
என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பிலும் வாழ்வான்"

விண்ணக வாழ்வு கண்டு
ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும்
கண்ணின் மணிகளைப் போல்
எம்மைப் பேணி வாழ்வித்தவர்களே!
உங்கள் நினைவு என்றும் அழியாது.
நீவிர் இறைவனின் இல்லத்தில்
இன்புற்றிருக்க - எம்
இதயத்தின் ஆழத்தில்
இருந்து வேண்டுகிறோம்.

14.12.2018 யாழ். மரியன்னை பேராலயத்தில்
5.30 மணிக்கும்
22.12.2018 அருள் ஆச்சிரமத்தில்
6.00 மணிக்கும்
ஆன்ம இளைப்பாற்றி திருப்பலிகள்
ஒப்புக் கொடுக்கப்படும்.

4ம் ஆண்டு



அமரர்
யோசவ் பிரான்சிஸ்
சேவியர் (சந்திரன்)
மலர்வு 01.08.1946 உதிர்வு 09.11.2014

19ம் ஆண்டு



அமரர்
யோசவ் யோன்சன்
(ராஜன்)
மலர்வு 09.08.1960 உதிர்வு 07.12.1999


பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்,
பூட்டப்பிள்ளைகள்

40/1, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்

AD106

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 11 . 04 . 1963



இறப்பு 15 . 12 . 2016

AD107

அமரர்
அலெக்சாண்டர் யூலியன் (குயின்ரன்)
(ஓய்வு பெற்ற தபால் ஊழியர்)

அன்பான அப்பா! என்னை உயிருக்கு உயிராய் பாசத்திற்கு பாசமாய் வளர்த்தீரே அப்பா! இன்று என்னை விட்டு எங்கே போனீர்கள் அப்பா! என்னை நீங்கள் எப்பொழுதும் செல்லமாக கூப்பிடுவீர்களே அப்பா! இன்று அத்தனையும் எங்கே போனது அப்பா! என்னை கரங்களில் ஏந்தி கனிவோடு பேசி கண்களாய் காத்தீரே அப்பா இன்று உமது கரங்களுக்காக ஏங்குகின்றேன் அப்பா! உமது பிரிவை தாங்காமல் நாங்கள் கதறுவதை ஒரு தடவை கேளுமப்பா இன்று எம்மை விட்டுப் பிரிந்து இரண்டு ஆண்டுகள் ஆனாலும் உமது பாசமும், பேச்சும், சிரிப்பும் எப்பொழுதும் எங்களுடன் இருக்கும் அப்பா உமது ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனை மன்றாடுகின்றோம்.

29, செபஸ்தியன் வீதி
குருநகர்

பிரிவால் துயருறும்
மனைவி, மகள்

## பொன்விழா நாயகர்களை வாழ்த்துகின்றோம்






**அருட்பணி.**
**மேரி கொர்கோனியஸ்**
**நேசநாயகம் அடிகள்**

நற்பெரும் இறை சேவையில்
பொற்பெரும் குருவாகி
நேசத்தின் நாயகமாக
நேயமுடன் பணி செய்த
பயணங்கள் நாம் மறவோம்
பணிக்குருவே வாழ்க! வாழ்க!!
மறைக்கல்வி நடுநிலைய
இயக்குநர் பணியதனில்
இயற்றிய சேவைகள்
மறைமாவட்ட வரலாற்றில்
மணியாக ஒளிர்கிறது
இறையாசி வேண்டி
இன்புற்று வாழ்த்துகின்றோம்.

**அருட்பணி.**
**A. C. கிறிஸ்த்தோபர்**
**அடிகள்**


உத்தம குருவாக உயர்பணியில்
உண்மைகள் உயிர் பெற
உறவுகள் வளர்ந்திட
மறைபரந்து
மனித மாண்பு தளைத்திட
மகோன்னத பணிகளால்
பொன்னாக ஒளிரும்
குருவே வாழ்க!
மறைமாவட்ட நிதியாளராக
நிலைத்திட்ட பலபணிகளால்
நின்றுயர்ந்தீர் வாழ்க!
இறையாசி வேண்டி
இன்புற்று வாழ்த்துகின்றோம்.

## அருட்பணியில் 60




வருங்கால சந்ததி வைரம் பெற்றிட
வைரத்தை விதைத்து நின்று
குருத்துவத் தடமதில்
வைரமாய் ஒளிரும் தந்தையே!
வன்னிப் போரில் வலி சுமந்தோரின்
வலது கரமாக வலம் வந்து
வரலாற்றிலும் வைரமானீர்
விதைத்த இடத்திலிருந்து வெளிவருதலும்
உதிர்த்த இடத்திலிருந்து துளிர்த்தலும்
இறைவனின் செயலில் இயற்கையின் நியதி
இதுவே சத்தியம் ஆதலால்
உமக்காக இறையருள் வேண்டி
நினைப்போம் திடுக்கிடுவோம்
எமக்கு எம் நினைவு உள்ளவரை....

## குருத்துவ வாழ்வில் 55 ஆண்டுகள்



**மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் குருத்துவ அபிஷேக நாள் (21.12.2018)**

யாழ். மறைமாவட்டத்தின் இமயம்
யாழ். மண்ணின் இணையற்ற இதயம்
தமிழ் மக்களின் நீதியின் குரல்
"நல்லாயன் நானே" இறை வாக்கின் வடிவம்
உங்கள் வாழ்வு தெய்வீகமானது
உள்ளம் உண்மையானது
வாக்கு இனிமையானது
செயல் தூய்மையானது
நன்றியுடன் போற்றி
நலம் வாழ வாழ்த்துகின்றோம்

### வாசக நெஞ்சங்களை வாழ்த்துகின்றோம்

ஏழ்மையில் உதித்த கிறிஸ்துவின் வழியில்
நற்கனி கொடுக்கும் இறை மக்களாக
அழைத்தல் ஆண்டை அர்த்தமுடன் வாழ்ந்திட
இனிதான கிறிஸ்மஸ் புத்தாண்டு வாழ்த்துக்கள்

- அருட்பணி. எஸ்.எயின்சிலி றொஷான் -
பாதுகாவலன் ஆசிரியர்



யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறையும் யாழ். திருமறைக்கலாமன்றமும் இணைந்து நடத்திய "கிறிஸ்தவ கற்கைகள் பற்றிய பன்னாட்டு மாநாடு" கைலாசபதி கலையரங்கில் சர்வமத தலைவர்களின் ஆசீருடன் ஆரம்பித்த வேளை..



கவிஞர் சூரியநிலாவின் (ஆ.ஜென்சன் றொனால்ட்) "மீட்பின் சுவடுகள்" கவிதை நூல் வெளியீட்டு விழா யாழ். மறைக் கல்வி நடு நிலையத்தில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக அருட்பணி. ஜீவா போல் அ.ம.தி அடிகளாரும் சிறப்பு விருந்தினராக பாதுகாவலன் ஆசிரியர் அருட்பணி. எயின்சிலி றொஷான் அடிகளாரும் கலந்து சிறப்பித்தனர்.

**2019 இல் வீட்டிற்கு ஒரு பாதுகாவலன் வாங்கி பயன் பெறுவீர்**



ஆனைக்கோட்டை புனித அடைக்கலநாயகி ஆலய மரியாயின் சேனை பிரசீடிய விழா அண்மையில் நடைபெற்றபோது...

### குருத்துவ பொன் விழாவில் வாழ்த்துகின்றோம்

"பணிவிடை பெறவல்ல
பணிவிடை புரிய வந்தேன்"
இயேசுவின் வாக்கின் வழி
மறைபணி புரிய
அர்ப்பண வாழ்வில்
அருட்குருவாக
ஜம்பது ஆண்டுகள்
மறைபணியில்
மக்களின் மனம் வென்ற
பொன் விழா நாயகனே!
பொன்னாக ஒளிரும் தங்களை
இறையருள் சூழ்கவென
வாழ்த்தி மகிழ்கின்றோம்.



**அருட்பணி.**
**மேரி கொர்கோனியஸ்**
**நேசநாயகம் அடிகள்**

டோனா, விமல், மேரி திரேசா,
பற்றிக் டினேஸ், யஸ்ரின், அன்ரனி, மேரி அக்னஸ்



யாழ் மறைமாவட்ட முன்னாள் ஆயர் அமரர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் பத்தாவது அறக்கொடைப் பேருரை பாதுகாவலன் கேட்போர் கூடத்தில் யாழ். மறை மாவட்ட குருக்கள் ஒன்றியத் தலைவர் அருட்பணி. ம.டேவிட் அடிகளார் தலைமையில் நடைபெற்றபோது, பிரதம விருந்தினராக யாழ். ஆயர் கலந்து கொண்டதுடன், நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட பீடாதிபதி பேராசிரியர் தி. வேல்நம்பி அவர்கள் "வெற்றி மீதான மனப்பாங்கின் வகிபாகம்" என்ற தலைப்பில் நிகழ்த்தினார்.



கிளிநொச்சி பரந்தனில் நிர்மாணிக்கப்பட்ட திருச்சிலுவைக் கன்னியர் சபையின் திருச்சிலுவை வைத்திய நிலையம் யாழ்.ஆயரால் திறந்து வைக்கப்பட்டது.

### பேராலயத்தில் கிறிஸ்து பிறப்பு மற்றும் புது வருடத் திருப்பலிகள்

**கிறிஸ்து பிறப்பு**

| | |
|---|---|
| நள்ளிரவுத் திருப்பலி (ஆயர் தலைமையில்) | : 11.45 |
| முதலாம் திருப்பலி | : காலை 5.30 |
| இரண்டாம் திருப்பலி | : காலை 7.00 |
| நன்றி வழிபாடு 31.12.2018 | : மாலை 5.00 |

**புதுவருடம்**

| | |
|---|---|
| நள்ளிரவுத் திருப்பலி | : 11.45 |
| முதலாம் திருப்பலி | : காலை 5.30 |
| இரண்டாம் திருப்பலி (ஆயர் தலைமையில்) | : காலை 7.00 |


# புனித வளன்
## கத்தோலிக்க அச்சகம்



- புத்தகங்கள்
- நினைவுமலர்கள்
- போஸ்ரர்கள்
- அழைப்பிதழ்கள்
- பற்றுச் சீட்டுக்கள்
- கலண்டர்கள்
- ஸ்ரிக்கர்கள்
- அலுவலக அச்சகத் தேவைகள்
- பைண்டிங் வேலைகள்

தரமான வேலை
துரிதமான சேவை
நியாய விலை


இல.360,பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொ.இல : 021 222 2378

# நெவாட் பௌண்டேஷன் லிமிட்டெட்

## மீன்வலை உருவாக்கல் தொழிற்சாலை



வடக்கு கிழக்கு மக்களின் கடல் உணவுத்தேவையைப் பூர்த்தி செய்யவும்,மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் உங்கள் தேவைக்கேற்ப வலைகளை உற்பத்தி செய்து வழங்கும் நிறுவனம்.



- ஜப்பானிய தொழில்நுட்பத்துடன் கூடிய உலகத்தரத்தில் முன்னணிவகிக்கும் யாணைக் (Yarn) கொண்டு, வாடிக்கையாளரின் தேவைக்கேற்பவும் விருப்பத்திற்கேற்பவும் மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்து வழங்கி வருகின்றோம்.
- நன்னீர் மீன் பிடிப்பதற்கான வலைகளையும் உங்கள் தேவைக்கேற்ப பெற்றுக் கொள்ளலாம்.
- 3 இழை - 27 இழை வரையிலான வலைகளை உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப உடனடியாக உற்பத்தி செய்து வழங்கி வருகின்றோம்.
- விவசாய தேவைகளுக்கான வலைகளும் உற்பத்தி செய்து வழங்கி வருகின்றோம்.
- உங்களுக்கு தேவையான நைலோன் நூல்களையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். (3 இழை – 60 இழை வரை 100 கிராமாக பெற்றுக் கொள்ளலாம்)

**எம் அன்பார்ந்த வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் எம் இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்.**

No.647, Beach Road, Jaffna, Sri Lanka E-mail: nefadfishnets@yahoo.com
Tel: +(94) 21 222 8919 Fax: +(94) 21 222 4781



இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2018ம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.